
For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/


# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்


மே 2026 திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும் விலை : ரூ 60 இதழ் 72


“ கர்த்தரால் நடந்த காரியங்களை அடுத்த தலைமுறைக்கு அறிவிப்போம்.

## இந்த இதழில்...


**கிளாரிந்தா:** ஒரு மறக்கப்பட்ட மிஷனரியின் வாழ்கை

**தமிழ்ப் புராட்டஸ்டண்ட் வரலாறு** ஆரம்ப கால வளர்ச்சியும் சவால்களும்

**மிஷனரி சவடுகள்** ஆவணங்கள் சொல்லும் உண்மைகள்

**வரலாற்றுக் கருத்தரங்கு** செய்திகள் மற்றும் நிகழ்வுகள்

**புதிய வெளியீடுகள்** புத்தகங்கள் & வெளியீடு



www.christianhistoricalsociety.in


Nurturing Faith, Building Futures!

# Inspire Young Hearts

## with Beautiful Stories!

Faith. Values. Imagination. A Lifetime of Lessons.

**Beautiful Books. Timeless Values.**





### The Ten Commandments for Kids

Learn values, faith, and goodness in a simple, fun way.





### பத்து கட்டளைகள்

Learn values, faith, and goodness in a simple, fun way.




### Bible Story Book for Kids

Stories that teach Love, Obedience, Kindness & Courage




### The Lion's Feast

A joyful story full of fun, imagination, and life lessons!

## WHY KIDS WILL LOVE THESE BOOKS

- Bright & Colorful Illustrations
- Easy-to-Understand Storytelling
- Strong Moral Values
- Perfect for Ages 3–10

**Perfect Gift for Kids!**

## PERFECT FOR

- Bedtime Reading
- Sunday School
- Gifts for Children
- School Libraries




**START YOUR CHILD'S READING JOURNEY TODAY!**


9840759438
www.anartistwrites.com


*Books that inspire today, Values that last forever.*

# பதிப்பாசிரியர்...

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்
மாத இதழ் 72 | மே 2026



ஆசிரியர்: மன்னா செல்வகுமார்
வடிவமைப்பு: சுஜித் ரெக்ஸ்
வெளியீடு: கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்

## வரலாற்றின் சுவடுகளில் விசுவாசப் பயணம்

'திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்' என்ற உயரிய நோக்கத்துடன் பயணித்துக் கொண்டிருக்கும் 'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்' இதழின் 72-வது மலர் (மே 2026) உங்கள் கரங்களில் தவழ்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

வரலாறு என்பது வெறும் கடந்த கால நிகழ்வுகளின் தொகுப்பு மட்டுமல்ல; அது நிகழ்காலத்திற்கு வலிமையையும், எதிர்காலத்திற்குத் தெளிவையும் தரும் ஒரு கலங்கரை விளக்கம். அந்த வகையில், இந்த இதழ் தமிழக திருச்சபை வரலாற்றின் மிக முக்கியமான ஆளுமைகளையும், நிகழ்வுகளையும் உங்கள் முன் நிறுத்துகிறது.

திருநெல்வேலி திருச்சபையின் தாய் என்று அழைக்கப்படும் 'கிளாரிந்தா' அவர்களின் வரலாற்று ஆய்வு நூல் வெளியீடு மற்றும் கல்வி கருத்தரங்கு குறித்த செய்திகள் இந்த இதழின் முக்கிய அம்சமாகும். ஒரு விதவைப் பெண்ணின் வைராக்கியம் எப்படி ஒரு பெரும் திருச்சபைக்கு வித்திட்டது என்பதை பேராசிரியர் பி. டேனியல் ஜெயராஜ் அவர்களின் ஆய்வு நுணுக்கமாக விளக்குகிறது.

மேலும், பாளையங்கோட்டைப் பார்வையற்றோர் பள்ளியின் தாய் 'மிஸ் அனி ஜேன் ஆஸ்க்வித்', முதல் தமிழ் நாவலாசிரியர் 'மாயூரம் வேதநாயகம் பிள்ளை', திருப்பத்தூர் ஆசிரமத்தை நிறுவிய மருத்துவர்கள் 'சவரிராயன் – எர்னஸ்ட் பாட்டன்', 'ஆயுள் மற்றும் ஆன்மாவின் மருத்துவர்' என்று போற்றப்பட்ட பேராயர் ஜார்ஜ் தியோடர் செல்வின் எனப் பல வரலாற்று நாயகர்களின் தியாக வாழ்வை இந்த இதழில் நாம் தரிசிக்கலாம். 'சுத்தாங்க சபை' தோற்றம் மற்றும் 'கொள்ளிடம் மிஷன்' குறித்த வரலாற்றுப் பதிவுகள் நமது முன்னோடிகளின் விசுவாசப் போராட்டங்களை நமக்கு நினைவூட்டுகின்றன.

சந்தாவைப் புதுப்பிக்க: நமது 'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்' இதழ் தடையின்றி உங்கள் இல்லம் தேடி வர, உங்கள் ஆண்டுச் சந்தாவைப் (₹600) புதுப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

சங்கத்தின் தேவைகள்: அரிய வரலாற்று ஆவணங்களைப் பாதுகாக்கும் டிஜிட்டல் சர்வர் (₹3 லட்சம்) மற்றும் நூலக உள் கட்டமைப்பு (₹4 லட்சம்) பணிகளுக்காகச் சங்கம் பெரும் நிதித் தேவையில் உள்ளது. இந்த வரலாற்றுப் பொக்கிஷத்தை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல உங்களால் இயன்ற நிதி வழங்கி உதவுங்கள்.

வரலாற்றைப் படிப்போம், அதன் சுவடுகளில் பயணிப்போம், வரும் தலைமுறைக்கு விசுவாசத்தின் சாட்சிகளாகத் திகழ்வோம்!

**கிறிஸ்துவின் பணியில்,**

கிறிஸ்துவின் பணியில்,
மன்னா செல்வகுமார்
Manna Selvakkumar

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
கதவு எண்: 2-2-8(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை - 627859,
தென்காசி மாவட்டம், தமிழ்நாடு.
தொலைபேசி: 04633 290401, 91767 80001
மின்னஞ்சல்: christianhistorical@gmail.com
இணையதளம்: www.christianhistoricalsociety.in

| சந்தா விவரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
A/c Number : 1748 020000 5614
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

UPI ID: mannaselvakumar@okicici

G Pay

+91 9176780001

இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு. தனிப்பட்ட சுழற்சிக்கு மட்டும். சந்தா விபரங்கள் மற்றும் நன்கொடை அளிக்கும் முறைகள் கடைசிப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.



# 'கிளாரிந்தா' வரலாற்று ஆய்வு நூல் வெளியீடு மற்றும் கல்வி கருத்தரங்கு

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க நூலக அருக்காட்சியகத்தில் கடந்த 25.04.2026 அன்று ஒரு நாள் கல்வி கருத்தரங்கு மற்றும் வரலாற்று நூல் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கப் பொறுப்பாளர் திரு. TTV சந்திரசேகரன் அவர்கள் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கினார். சங்கத்தின் செயலாளர் திரு. மன்னா செல்வகுமார் அனைவரையும் வரவேற்று, கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் ஆற்றி வரும் பணிகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். திருநெல்வேலி திருமண்டலத்தின் வடக்கு சபை மன்றத் தலைவர் அருள்திரு. A. ஜெபரத்தினம் அவர்கள் ஆரம்ப ஜெபம் செய்து நிகழ்வைத் தொடங்கி வைத்தார். வரலாற்றுச் சங்க உறுப்பினர் திரு. ரயில் ரவி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

இந்த விழாவில், லிவர்பூல் ஹோப் பல்கலைக்கழகத்தின் உலகளாவிய கிறிஸ்தவத் துறை மேனாள் பேராசிரியரும், புகழ்பெற்ற வரலாற்று ஆய்வாளருமான பேராசிரியர் அருள்திரு. பி. டேனியல் ஜெயராஜ் அவர்கள் எழுதிய **'கிளாரிந்தா ஆஃப் திருநெல்வேலி: விதவை நிலையிலிருந்து தமிழ் புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவத்தின் தாய் வரை'** (Clarinda of Tirunelveli: From Widowhood to Mother of Tamil Protestant Christianity) என்ற ஆய்வு நூல் வெளியிடப்பட்டது.

மதுரை - இராமநாதபுரம் திருமண்டலத்தைச் சேர்ந்த அருள்திரு. ஜான்சன் சாமுவேல் ஜெசுதாஸ் அவர்கள் நூலை அறிமுகம் செய்து உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து நூலாசிரியர் பேராசிரியர் டேனியல் ஜெயராஜ் அவர்கள் கிளரிண்டாவின் வரலாறு மற்றும் அவரது பணிகளை மையமாகக் கொண்டு கருத்தரங்கின் முதல் பகுதியை நடத்தினார். பின்னர், திரு. ரயில் ரவி அவர்கள் 'முதலூர் தாவிது சுந்தரானந்தம்' அவர்களின் வரலாற்றுச் சிறப்புகளைப் பகிர்ந்து கொண்டார்.



மதிய உணவிற்குப் பிறகு, விருதுநகர் பாஸ்டர் கார்த்திக் ஸ்டீபன் ஜெபத்துடன் கருத்தரங்கின் இரண்டாம் பகுதி தொடங்கியது. இதில் பங்கேற்பாளர்களின் பல்வேறு கேள்விகளுக்கு நூலாசிரியர் விளக்கமளித்தார்.

நிறைவாக, திரு. மன்னா செல்வகுமார் நன்றி உரையாற்றினார். அப்போது, அடுத்த நிகழ்வாக **'சரபோஜி மன்னர் வரலாற்று கருத்தரங்கு'** வரும் 2027-ஆம் ஆண்டு பிப்ரவரி 27-ஆம் தேதி நடைபெறும் என்ற தகவலைப் பகிர்ந்து கொண்டார். திரு. ரயில் ரவி அவர்களின் நிறைவு ஜெபத்துடன் நிகழ்ச்சி இனிதே முடிந்தது.

இந்தக் கல்வி கருத்தரங்கில் நெல்லை, தென்காசி, விருதுநகர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து வரலாற்று ஆய்வாளர்கள், பேராசிரியர்கள், மருத்துவர்கள், குருமார்கள், ஊழியர்கள் மற்றும் பல்வேறு சபைகளின் தலைவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.



# கிளரிந்தாவின் வரலாற்று நூல் வெளியீடு

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க நூலக அருக்காட்சியகத்தில் கடந்த 25.04.2026 அன்று ஒரு நாள் கல்வி கருத்தரங்கு மற்றும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

இதில், லிவர்பூல் ஹோப் பல்கலைக்கழகத்தின் உலகளாவிய கிறிஸ்தவத் துறை மேனாள் பேராசிரியரும், புகழ்பெற்ற வரலாற்று ஆய்வாளருமான பேராசிரியர் அருள்திரு. பி. டேனியல் ஜெயராஜ் அவர்கள் எழுதிய 'கிளாரிந்தா ஆஃப் திருநெல்வேலி: விதவை நிலையிலிருந்து தமிழ் புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவத்தின் தாய் வரை' (Clarinda of Tirunelveli: From Widowhood to Mother of Tamil Protestant Christianity) என்ற வரலாற்று நூல் வெளியிடப்பட்டது.

பதினெட்டாம் நூற்றாண்டில் திருநெல்வேலியில் முதல் புராட்டஸ்டன்ட் சபையை நிறுவிய மராத்திய பிராமணப் பெண்மணியான கிளாரிந்தாவின் வாழ்க்கையை, ஜெர்மன் மொழியில் உள்ள சமகால ஆதாரங்களைக் கொண்டு இந்த நூல் விவரிக்கிறது.

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் இந்த வெளியீட்டை, திருநெல்வேலி திருமண்டலத்தின் வடக்கு சபை மன்ற தலைவர் அருள்திரு. A. ஜெபரத்தினம் அவர்கள் வெளியிட, அதன் முதல் பிரதியை திருமதி. கிறிஸ்டி லூசிபர் (Christy Lucifer) அவர்கள் பெற்றுக்கொண்டார். நூலின் இரண்டாம் பிரதியை விருதுநகர் பாஸ்டர் கார்த்திக் ஸ்டீபன் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் வரலாற்று ஆய்வாளர்கள், இறையியல் மாணவர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். கிளரிண்டாவின் துணிச்சலான பயணம் மற்றும் தென் தமிழகத்தில் கிறிஸ்தவம் பரவ அவர் ஆற்றிய முன்னோடிப் பணிகள் குறித்து ஆசிரியர் விரிவாக எடுத்துரைத்தார்.







# ஓடிப் போனவன்-20

முனைவர்.ஜான்சி பால்ராஜ்
நாவலாசிரியர்

சத்தியநாதனும் முத்துவும் வந்ததிலிருந்து விஜயராமபுரம் புது வெளிச்சம் பெற்றது போல பளிச்சென்று இருப்பதாக மக்கள் பேசத் தொடங்கினர். எப்போதும் அவர்களைச் சுற்றி சிறுவர்களும் பெரியவர்களும் இருந்து எதையாவது பேசிக்கொண்டே இருந்தனர். இருவரும் மாறி மாறி வேத வசனங்களை எடுத்துச் சொல்லி, அதன் அர்த்தங்களை அவர்களது உள்ளத்தில் விதைத்தனர்.

அன்பிற்காகவும், பாதுகாப்பிற்காகவும், நிம்மதியான வாழ்க்கைக்காகவும் ஏங்கிக் கொண்டிருந்த அந்த எளிய மக்களின் வாழ்வில், இயேசுவின் கருணை ஒரு மென்மையான காற்றாய் வந்து அவர்களை அவர்களோடு கட்டிப்போட்டது. அவர்கள் இருவரையும் இயேசுவின் பிரதிநிதிகளாகவே அம்மக்கள் காணத் தொடங்கினர்.

வேலைகளுக்குச் செல்லாமல் சோம்பலாக இருந்தவர்களிடம், 'இது கடவுளின் விருப்பமல்ல' வேலை செய்யாதவன் சாப்பிடவும் கூடாது,' என்று வேதத்தின் வார்த்தைகளை எடுத்துச் சொன்னார்கள். 'வியர்வை சிந்தி உழைப்பதே மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதம்,' என்றும் உணர்த்தினர்.

அந்த வார்த்தைகள் கடவுளின் வார்த்தைகளாக அவர்களின் வாழ்க்கைக்குள் சென்று பதிந்தன. போதைக்காக கள்ளை இறக்கிய கைகள், இப்போது உழைப்பின் களைப்பை தணிக்க அளவோடு அதைத் தொடத் தொடங்கின. குடும்பங்களில் பெண்கள் இந்த மாற்றத்தை தெய்வச் செயலாகவே கருதினர். இதனால் ஏற்பட்ட மனமாற்றம் நல்லொழுக்க நெறியைத் தொடங்கி வைத்தது. அவர்கள் அவ்வப்போது வேத வசனங்களின் விளக்கங்களை கேட்கவும், ஜெபம் செய்யவும் முத்துவை நாடி வந்தனர். முத்துவும் சத்தியநாதனும் சளைக்காமல் அவர்களுக்குப் போதித்தனர்.

மன குழப்பத்தோடு கேட்கப்படும் ஒவ்வொரு கேள்விக்கும் பதில் அளித்தனர். ஒரு நாள் மாலை நேரத்தில் சிலர் கூடி வந்திருந்தனர். அப்போது சத்தியநாதன் தாவீதிடம் 'இந்த மக்களோடு நாம் பேசுவதற்காக ஒரு தனி இடம் அமைத்தால் நன்றாக இருக்கும். இரவென்றும் பகலென்றும் பாராமல் அவர்கள் நம்மைத் தேடி வருகிறார்கள்' உன் மாமன் குடும்பத்திற்கும் இது சிரமம் ஆகாதா?' என்றார்.

அவனும் ஆம் என்பதாக தலை அசைத்தான். 'நானும் இதைப்பற்றி யோசித்தது உண்டு' என்றான். 'அய்யா, என் அக்கா வீட்டின் பின்புறம் காலி இடம்

இருக்கு' அதைப் பற்றி நாளை நாம் பேசலாம்" என்றான். அவர்கள் பேசிக்கொண்டிருந்ததை முத்துவின் அத்தை கேட்டுக்கொண்டே வந்தாள். மாமனும் பின்னால் வந்தார். 'எங்களுக்கு நீங்க ரெண்டுபேரும் இந்த வீட்டில இருக்குறது தெய்வமே கூட இருக்குற மாதிரி இருக்கு'வேற எங்கேயும் போக வேண்டாம்பா'வேணும்னா நம்ம வீட்டு முன்னால கிடக்குற இந்த காலி எடத்திலேயே ஒரு வீடு கட்டிக்கிடுவோமே" என்றார் அன்பொழுக.

சத்தியநாதன் எழுந்து அவரை அணைத்துக் கொண்டார். 'உங்கள் அன்பு' நான் வேறெங்கும் காணாத ஒன்று,' என்றார்.

அத்தையும் கண் கலங்கினாள்.

'எங்க கண்ணுக்குள்ளேயே கடைசிவரை நீ இருக்கணும் முத்து"என்றாள்.

முத்து அன்பில் உருகி, 'கடவுள் நினைப்பதுதான் நடக்கும் அத்தை' என்றான்.

'எல்லாமே நம்ம கடவுளோட திட்டம் தான். நாளைக்கே வேலை ஆரம்பிக்கலாம், என்றார் மாமன் உற்சாகமாக. 'நம்ம பயலுவகிட்ட சொன்னா போதும்'உடனே எல்லாரும் சேர்ந்து வந்து கட்டி முடிச்சிருவாங்க' என்றார் எல்லோரையும் பார்த்தபடி. அங்கிருந்தவர்கள் அதைக் கேட்டதும் எழுந்தனர்.,

'ஓ ஓ ஓ.. . என்று உற்ச்சாகமாக கூச்சலிட்டனர் சிறுவர்கள். பெரியவர்களின் முகம் மலர்ந்தது. உடனே வேலையை ஆரம்பிச்சிருவோம்' என்று ஆளாளுக்கு தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். இச்செய்தி ஊர் முழுவதும் பரவியது.

அன்று இரவு நிலா மேலே ஏறி வரவும் முத்துவின் வீட்டு முன் வாலிபர்கள் திரண்டு வந்தனர்.

இப்போது விளையாட்டுக்கு முன் வேதம் வாசிப்பு, அதற்குப் பின் ஜெபம்' அதற்குப் பின் தான் சிலம்பம் விளையாட்டு. எல்லாம் அந்தக் கம்புகளின் சுழற்சியின் ஓசை பனங்காடுகளை வெட்டி சுற்றிய ஊர்களுக்கும் சென்று சேரும். அருகமை ஊர்களின் செவியும் கண்களும் விஜயராம்புரத்தின் பக்கம் திரும்பியது.

முத்து வந்ததிலிருந்து அவர்களின் நடையிலும் ஒழுங்கு. செயல்களிலும் நேர்த்தி. பேச்சிலும் அமைதி தோன்றியது. அவனைப் பற்றிய செய்தி காட்டுத்தீ போல பரவியது. பக்கத்து ஊர்களிலிருந்தும் மக்கள் வந்து அவர்களின் போதனைகளைக் கேட்டனர்.

அடுத்த நாள் காலை சூரியன் உதிக்குமுன் சத்தியநாதன் ஜெபம் செய்து வீடு கட்டும் வேலையைத் தொடங்கி வைத்தார். அன்று ஆண்கள் பெண்கள் என யாரும் வேலைக்குப் போக மறுத்துவிட்டனர்.

ஆற்று மணலையும் குளத்து களிமண்ணையும் சுமந்து வந்து குவித்தனர். முத்துவும் அவர்களோடு சேர்ந்து மண் சுமந்தான். 'நீ வேண்டாம் முத்து, நாங்க இருக்கோம்' என்று தடுத்தவர்களிடம் 'இது என் தேவனுடைய வீடு' நான் இல்லாமலா?' என்றான்.

மறுநாள் நிலா மீண்டும் உதித்து வந்தபோது மண் குவியலின் அருகில் ஆண்களும் பெண்களும் கால்களை மடக்கி அமர்ந்திருந்தனர்.

சிறிது நேரம் போதனையோடு ஜெபமும் செய்துவிட்டு வேலையைத் தொடர்ந்தனர். பெண்கள் தண்ணீர் எடுத்து வந்தனர். சிலர்மண் குழைக்க தண்ணீர் ஊற்றினர். சிலர் மண்ணை கால்களால் குழைத்தனர். அங்கு மகிழ்ச்சியும் சமாதானமும் அஸ்திபாரங்களாய் ஊன்றப்பட்டன. அந்த மண் வெறும் மண்ணாக அல்ல அவர்களின் நம்பிக்கையாக உருமாறி கொண்டிருந்தது. கல் தூண்கள் ஒன்றன்பின் ஒன்றாக நிலத்தில் பதிந்தன.

ஒவ்வொரு தூணும் 'இது நம்முடைய இடம்' என்று மண்ணுக்குள் வேரூன்றியது. முந்தைய ஆண்டுகளின் மீதமான கருப்பட்டிகள் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் கொண்டு வரப்பட்டு சுவர்களின் உறுதிக்காக மண்ணோடு இணைத்து சேர்க்கப்பட்டது. ஆங்காங்கே கிடந்த பெருங்கற்களும் தேவையான இடங்களில் சேர்க்கப்பட்டன.

சுவர்கள் மிக வேகமாக உயர்ந்தன.. . . மண் மூடிய கற்கட்டிடமாய்.

சிறுவர்கள் சிறு சிறு கற்களை எடுத்துக் கொண்டு வந்து ஓடியாடு விளையாடினர். அவர்களின் சிரிப்பு சுவரில் பதிந்த கல்லைப் போல உறுதியாய் இருந்தது. முதியவர்களின் முகங்கள் நிலவொளியில் ஒளிர்ந்து கொண்டிருந்தன. அவர்களின் கண்களில் நம்பிக்கைத் தீபங்கள் அசைந்தன.

மூன்றே நாட்களில் சுவர்கள் எழுந்து கம்பீரமாக வெயிலில் காய்ந்துபடி நின்றன. அது வெறும் கட்டிடம் அல்ல. ஒன்றுக்கொன்று கட்டி அணைத்தபடி நின்றிருந்த உள்ளங்களின் உறவு.

ஓரிரு நாட்களில் புதிய ஓலைகள் மணக்க மணக்க வேயப்பட்டன. தரை சாணத்தால் மெழுகப்பட்டது. அழகிய பனங்கம்புகளால் கதவு செதுக்கப்பட்டது. அந்த வீட்டைச் சுற்றிலும் ஓலைமட்டைகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு சுற்றுக்கட்டாய், மேல் நோக்கிய கூர் அம்பு போன்று மதிலாக நடப்பட்டது. ஒரே வாரத்திற்குள் ஊரின் மேற்கு ஓரத்தில் ஒரு அழகிய ஆலயம் எழுந்தது.

அதை பார்த்து சத்தியநாதன் ஆனந்தக் கண்ணீர் விட்டார். தாவீதும் தனது உணர்ச்சிப் பெருக்கத்தை மறைக்க இயலாமல் தரையில் மண்டியிட்டு அழுதான். பார்ப்பதற்கு அது ஒரு வீடு அல்ல'பாசம் குழைந்து நின்ற ஒரே இதயமாக தோன்றியது.

அந்த ஆலயத்தின் முன் அனைவரும் ஒன்று

சேர்ந்து நின்றனர், ஒரே குடும்பமாக. ஊரில் ஒருசிலருக்கு மட்டும் அது கண்களை உறுத்தியது.

'எலேய் முத்து, பெரியாளா ஆயிட்டால நீ. எங்களைளாம் மதிப்பியா இனி நீ? வீடு கட்டியிருக்கா. எங்கிட்ட ஒன்னுமே சொல்லவே இல்லையேல!?. 'என்றான் கண்ணப்பன்.

அண்ணே, உங்க கிட்ட சொல்லாமல் என்ன செய்யப்போறோம்? நீங்க இல்லாமலா? சுவர் காயட்டும். இன்னும் ரெண்டு மூணு நாளில் ஊரையே கூப்பிட்டு பால் காய்ப்போம்.

அதில் நீங்க தான்னே தலையா இருக்கனும். அதை முன்னமே நான் முடிவு பண்ணிட்டேன்' என்றான் முத்து.

கண்ணப்பனின் விரோதப் பார்வையைத் தணிக்க முத்து ஏற்கெனவே எடுத்த முடிவு இது. வீடு கட்டப்பட்டுக் கொண்டிருந்த போது அவனும் அவன் வீட்டாரும் அங்கு வரவில்லை. அப்போதே முத்துவுக்குள் அவனை எப்படியாவது இந்த அன்பின் அணைப்பிற்குள் அவனையும் கொண்டுவர வேண்டும் என திட்டமிட்டான்.

கண்ணப்பன் அவனது பேச்சைக் கேட்டதும் முகம் முழுக்க பற்கள் தெரிய சிரித்தான். முத்துவுக்கு மிக நெருக்கமாக வந்து நின்றான். 'முத்து சும்மா சொல்லக் கூடாதுல்ல.. . நீ நல்ல மனசுகாரன் தான். நாந்தான் என்னமோன்னு நெனைச்சிட்டேன். நான் வாரமுல. நீ கூப்பிட்டு வராம போவனால? நீ என் தம்பில.. . ' என்றவன் முத்துவின் தோளில் கைப்போட்டு தெரு வழியே எல்லோரும் பார்க்க கம்பீரமாக நடந்தான்.

தொடர்ந்து பயணிப்போம்...




கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL

A/c Number : 1748 020000 5614

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
90420 15221 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
( CHRISTAVA VARALATRU SUVADUGAL )
என்ற பெயரில் எடுக்கவும்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com


# பன்னாட்டுக் கிறித்தவத் தமிழ்ச்சங்கம்

## வெளியீடுகள்

சிலுவைச்சித்தர். **ஜோசப் மோகன் குமாரின்**

இறை இலக்கிய நூல்கள்.







1 **தச்சனின் கதை**
(புதுக்கவிதையில்
இயேசு கிறிஸ்துவின்
வாழ்க்கை வரலாறு)





2 **கவண்கல் கவிதைகள்**
(விடுதலை இறையியல்
கவிதைகள்)





3 **இலாரன்சு அடிகளார் இலக்கியப் படைப்புகள்**
(தொகுப்பு)




4 **ஒரு தீப்பந்தம்**
(தினதியானம்)





5 **பகுத்தறிவு கிறிஸ்தவம்**
(கிறிஸ்தவ இலக்கியக்
கட்டுரைகள்)




6 **திருக்கூத்து**
(நாடகம்)




7 **லூத்தர் காவியம்**
(புதுக்கவிதையில் மார்டின் லூத்தர்
வாழ்க்கை வரலாறு)





8 **சிலுவை மைந்தன்**
செப்பிய சிவப்பு
வார்த்தைகள்
ஏழு


**பன்னாட்டுக் கிறித்தவத் தமிழ்ச் சங்கம்.**

தபால் பை எண்; 5313. கோடம்பாக்கம். சென்னை600024 தமிழ்நாடு.தென் இந்தியா.

கைபேசி எண் +91 98407 85378 மின்னாஞ்சல் bishopjmk@gmail.com




# பாளையங்கோட்டைப் பார்வையற்றோர் பள்ளியின் தாய்: மிஸ் அனி ஜேன் ஆஸ்க்வித்

மன்னா செல்வகுமார்

தென்னிந்தியாவின் திருநெல்வேலிப் பகுதியில் கல்விப் பணியிலும், சமூக சேவையிலும் கிறிஸ்தவ மிஷனரிகளின் பங்களிப்பு அளப்பரியது. அதில் தனித்துவம் வாய்ந்த ஒரு மைல்கல், பாளையங்கோட்டையில் பார்வையற்றோருக்காகத் தொடங்கப்பட்ட பள்ளியாகும். இந்தப் பணியின் பின்னணியில் ஒரு தாயுள்ளத்தோடு செயல்பட்டவர் மிஸ் அனி ஜேன் ஆஸ்க்வித். **'பார்வையற்றோரின் பெரியம்மா'** என்று அன்போடு அழைக்கப்பட்ட இவரது அர்ப்பணிப்பு மிக்க வரலாறு நமக்கு இன்றும் மெய்சிலிர்க்க வைகின்றது.

**இந்திய வருகையும் ஆரம்பப் பணியும்:**

இங்கிலாந்தின் சி.எம்.எஸ் (Church Missionary Society) அமைப்பினால் அனுப்பப்பட்ட அனி ஜேன் ஆஸ்க்வித், 1881-ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் தேதி பாளையங்கோட்டைக்கு வந்தடைந்தார். தொடக்கத்தில் சாரா டக்கர் நிறுவனத்தில் மிஷனரியாகப் பணியாற்றினார். அவரது முயற்சியால் அந்த நிறுவனம் ஒரு உயர்நிலைப் பள்ளியாகவும், பின்னர் கல்லூரியாகவும் தரம் உயர்த்தப்பட்டது.

**பணியின் திருப்புமுனை - சுப்பு என்னும் சிறுவன்:**

ஒரு நாள் தனது வீட்டு வாசலில் பிச்சை கேட்டு நின்ற 'சுப்பு' என்ற பார்வையற்ற சிறுவனை அஸ்குவித் சந்தித்தார். **'பிச்சை எடுப்பதைத் தவிர உன்னால் வேறென்ன செய்ய முடியும்?'** என்று அவர் கேட்டபோது, உழைத்து வாழும் உணர்வை அவனுக்குள் விதைத்தார். அவனை ஒரு 'புங்காவாலா'வாக (விசிறி இழுப்பவர்) வேலையில் அமர்த்தி, உழைப்புக்கான ஊதியத்தை வழங்கினார். இந்தச் சிறிய தொடக்கமே தென்னிந்தியாவில் பார்வையற்றோர் கல்விக்கான விதையாக அமைந்தது.

**கல்வி முறை மற்றும் 'மூன்' எழுத்துமுறை** (Moon's Type)**:**

பார்வையற்றோர் தொடுதல் மூலம் வாசிப்பதைக் கண்டறிந்த அஸ்குவித், அவர்களுக்குத் தமிழ் மொழியில்



கல்வி புகட்ட விரும்பினார். 1888-இல் இங்கிலாந்து சென்றிருந்தபோது, டாக்டர் வில்லியம் மூன் என்பவரைச் சந்தித்து, அவர் உருவாக்கிய **'மூன் எழுத்துமுறையை'**க் கற்றார். 1889-இல் இந்தியா திரும்பியபோது, தமிழ் உயிர் மற்றும் மெய் எழுத்துக்களுக்கான மூன் குறியீடுகளுடன் பாடப்புத்தகங்களைத் தயாரித்து வந்தார். சுப்பு (ஞானஸ்நானத்திற்குப் பின் 'தேவப்பிரியம்') இந்தப் புதிய முறையில் முதன்முதலாகப் படித்துத் தேறினான். இவனே இப்பள்ளியின் முதல் பார்வையற்ற ஆசிரியருமாவார்.

**பள்ளியின் வளர்ச்சி (1890 - 1910):**

1. **1890:** பாளையங்கோட்டையில் பார்வையற்றோருக்கான முறையான பள்ளி வகுப்புகள் தொடங்கின. ஆரம்பத்தில் சிறுவர்களுக்கு மட்டுமே இருந்த இப்பள்ளியில், 'ஆவுடையம்மாள்' **(கிருபைபெற்றாள்)** என்ற சிறுமி முதல் மாணவியாகச் சேர்ந்ததன் மூலம் சிறுமிகளுக்கான பிரிவும் தொடங்கியது.
2. **1893:** பண்ணைவிளையில் மூன்றாவது பள்ளி தொடங்கப்பட்டது.
3. **1908:** மாணவர் எண்ணிக்கை அதிகரித்ததால், பாளையங்கோட்டையில் 12 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு புதிய வளாகத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.
4. **தொழிற்கல்வி:** மாணவர்கள் சுயமாக உழைத்து வாழ வேண்டும் என்பதற்காகப் பாய் நெய்தல், பருத்தி ஆடை நெய்தல், நாற்காலிகளுக்குப் பின்னுதல் போன்ற தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டன.

**பிரெய்லி முறையின் அறிமுகம் (1912):**

தொடக்கத்தில் மூன் எழுத்துமுறை பயன்படுத்தப்பட்டாலும், அது கைகளால் எழுத கடினமாக இருந்தது. எனவே, 1912-ஆம் ஆண்டு அஸ்குவித் அவர்கள் **'பிரெய்லி'** (Braille) முறையை அறிமுகப்படுத்தினார். தமிழ் மொழிக்கேற்ப பிரெய்லி குறியீடுகளை அமைத்து, பார்வையற்ற மாணவர்கள் தாங்களாகவே எழுதவும் படிக்கவும் வழிவகை செய்தார்.

**அரசின் அங்கீகாரமும் கௌரவமும்:**

மிஸ் அஸ்குவித்தின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டி, சென்னை அரசு அவருக்கு 1907-ஆம் ஆண்டு புத்தாண்டு தினத்தில் **'கைசர்-இ-ஹிந்த்'** (Kaiser-I-Hind) வெண்கலப் பதக்கத்தை வழங்கி கௌரவித்தது. பல மாவட்ட ஆட்சியர்களும், ஆளுநர்களும் இவரது பள்ளிக்கு வருகை தந்து பாராட்டியுள்ளனர்.

**இறுதிப் பயணமும் மறைவும்:**

சுமார் 38 ஆண்டுகள் இந்தியாவில் பணியாற்றிய மிஸ் அஸ்குவித், உடல்நலக் குறைவு காரணமாக 1918-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இங்கிலாந்து திரும்பினார். 1924 செப்டம்பர் 29-ஆம் தேதி இங்கிலாந்தின் டன்பிரிட்ஜ் வெல்ஸ் (Tunbridge Wells) என்ற இடத்தில் தனது 73-வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

'ஒளியை நோக்கி' என்ற நோக்கில் அவர் தொடங்கிய இந்தப் பணி, இன்று **'தரிசனமனை'** (House of Vision) என்ற பெயரில் பன்முகத்தன்மை கொண்ட நிறுவனமாக வளர்ந்து நிற்கிறது. பார்வையற்றோர் சமூகத்தின் ஒரு அங்கமாக, மரியாதையுடனும் சுயசார்புடனும் வாழ்வதற்கு மிஸ் அனி ஜேன் ஆஸ்க்வித் போட்ட அடித்தளம் என்றும் போற்றுதலுக்குரியது.






# நவீனத் தமிழ் இலக்கியத்தின் விடிவெள்ளி: மாயூரம் வேதநாயகம் பிள்ளை

மன்னா செல்வகுமார்

தமிழ் இலக்கிய வானில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் உதித்த ஒரு துருவ நட்சத்திரம் மாயூரம் வேதநாயகம் பிள்ளை. அவர் ஒரு நீதிபதி மட்டுமல்ல; நாவல் இலக்கியத்தின் தந்தை, இசை மேதை, சமூக சீர்திருத்தவாதி மற்றும் பெரும் கொடையாளி. தமிழ் உரைநடைக்கும், இசைத் தமிழுக்கும் அவர் ஆற்றிய தொண்டு காலத்தால் அழியாதது.

**இளமையும் கல்வியும்:**

திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள குளத்தூரில் பிறந்தவர் வேதநாயகம் பிள்ளை. இளமையிலேயே தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஆழ்ந்த புலமை பெற்றார். இவரது நற்பண்புகளையும், மொழித்திறனையும் கண்டு ஆங்கில அரசு இவரை நீதிமன்ற மொழிபெயர்ப்பாளராக நியமித்தது. இவரது திறமை இவரை விரைவிலேயே மாவட்ட முனிசீப் (நீதிபதி) நிலைக்கு உயர்த்தியது.

**செங்கோல் ஏந்திய செம்மல்:**

தரங்கம்பாடி, சீர்காழி, மாயூரம் ஆகிய இடங்களில் நீதிபதியாகப் பணியாற்றியபோது, 'நீதி தவறாத

நேர்மையாளர்' என்ற பெயரைப் பெற்றார். வழக்குகளைத் தீர்க்கும்போது செல்வந்தர் – ஏழை, உறவினர் – மற்றவர் என்ற பாகுபாடு அவரிடம் இருந்ததில்லை. சட்டத்தின் நுணுக்கங்களை விட, அறத்தின் பாற்பட்ட உண்மையை உணர்ந்து தீர்ப்பு வழங்குவதே இவரது பாணியாக இருந்தது.

**முதல் தமிழ் நாவலின் தந்தை:**

தமிழில் உரைநடை இலக்கியம் வளர்ந்து கொண்டிருந்த காலத்தில், 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் நூலை எழுதி தமிழ் இலக்கிய வரலாற்றில் தடம் பதித்தார். இதுவே தமிழின் முதல் நாவலாகும். வெறும் கற்பனைக் கதையாக மட்டுமில்லாமல், நகைச்சுவை ததும்ப நல்லறங்களைப் புகட்டும் நோக்கில் இதை அவர் படைத்தார். இந்த நாவலில் வரும் ஞானாம்பாள் போன்ற கதாபாத்திரங்கள் பெண்களின் அறிவுத்திறனுக்கும், ஆளுமைக்கும் சான்றாக விளங்குகின்றன.

**பெண் கல்வியின் முன்னோடி:**

பெண்கள் முன்னேற்றமடைந்தால் மட்டுமே நாடு உருப்படும் என்று அன்றே முழங்கியவர் வேதநாயகம் பிள்ளை. தன் மகள்களுக்காகவும், தமிழ்ச் சமூகப் பெண்களுக்காகவும் 'பெண்மதி மாலை' என்ற நூலை இயற்றினார். பெண்கல்வி, பெண்களின் உரிமைகள் மற்றும் அவர்கள் இல்லறத்தை நடத்தும் முறை குறித்துப் பல கட்டுரைகளை எழுதி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

**மனிதாபிமானத்தின் சிகரம்:**

தஞ்சை மண்ணில் கடும் பஞ்சம் ஏற்பட்டபோது, மக்களின் துயர் கண்டு கலங்கியவர் வேதநாயகம் பிள்ளை. 'ஐயோ! மண்ணில் அநேகர் என் கண்முன்னே மாய்கின்றார்' என்று நெக்குருகிப் பாடியதுடன் நில்லாமல், தனது சொந்தப் பணத்தைச் செலவிட்டு மாயூரத்தின் பல இடங்களில் 'கஞ்சிச் சாலைகள்' அமைத்தார். ஆயிரக்கணக்கான ஏழைகளின் பசியைத் தீர்த்த இவரை இசை மேதை கோபாலகிருஷ்ண பாரதியார், 'நீயே புருஷ மேரு' என்று பாடிப் புகழ்ந்தார்.

**சமய நல்லிணக்கத்தின் அடையாளம்:**

கிறித்தவ மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், மற்ற மதங்களைப் போற்றும் பக்குவம் கொண்டவர். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையுடனும், திருவாவடுதுறை ஆதீனத் தலைவருடனும் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். மதச் சண்டைகளை வெறுத்த அவர், அனைத்து சமயத்தினரும் பாடும் வகையில் 'சர்வ சமய சமரசக் கீர்த்தனம்' என்ற நூலை இயற்றிச் சமய நல்லிணக்கத்திற்கு வித்திட்டார்.


**இறுதிக்காலம் மற்றும் சேவை:**

பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகும் மக்கள் சேவையை விடாத அவர், மாயூரம் நகராட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றுப் பல நற்பணிகளைச் செய்தார். தமிழ் மொழிக்கு நாவல் என்னும் புதிய இலக்கிய வடிவத்தைத் தந்தவர், இசைத் தமிழால் இறைவனைப் போற்றியவர், பஞ்ச காலத்தில் மக்களின் பசிப்பிணி போக்கிய வள்ளல் எனப் பன்முகத் திறமையோடு வாழ்ந்த வேதநாயகம் பிள்ளை, தமது 65-ஆம் வயதில் இயற்கை எய்தினார்.




நீதிபதி வேதநாயகம் பிள்ளை அவர்கள் தமிழுக்குத் தந்த 'பிரதாப முதலியார் சரித்திரம்' இன்று பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலகப் புகழ் பெற்றுள்ளது. இலக்கியம், இசை, சமூகம், நீதி எனத் தான் தொட்ட துறைகளுக்கெல்லாம் பெருமை சேர்த்த அந்த மகத்தான மனிதரின் புகழ், தமிழ் இருக்கும் வரை நிலைத்து நிற்கும்.

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் சார்பில் நாம் சமீபத்தில் மாயவரத்தில் மேற்கொண்ட கள ஆய்வுப் பயணத்தில், சமத்துவச் சிந்தனைகளுக்கும் ஆணிவேராக இருந்த நீதிபதி மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களின் நினைவு இடத்தில் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் சார்பில் மரியாதை செலுத்தினோம். இந்த வரலாற்றுச் சுவடுகளைப் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வது நமது தலையாய கடமையாகும்.



# ஐரோப்பியப் பயணம்:

## ஆசிரம வாழ்வின் ஆதிப்புள்ளி

டாக்டர் சவரிராயன் ஏசுதாசன் அவர்கள் தனது மருத்துவக் கல்வியை சென்னையில் முடித்த பிறகு, மருத்துவத் துறையில் மேலதிக அறிவைப் பெறவும், உலகத் தரம் வாய்ந்த மருத்துவ முறைகளைக் கற்கவும் விரும்பினார். இந்தத் தேடலே அவரை 1910-ம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளுக்கு இட்டுச் சென்றது. இந்தத் பயணம் வெறும் கல்விக்கானதாக மட்டுமில்லாமல், அவரது வாழ்நாள் குறிக்கோளை உறுதிப்படுத்தும் ஒரு புனிதப் பயணமாகவும் மாறியது.

### ஐரோப்பியப் பயணத்தின் நோக்கம்:

1910-ம் ஆண்டு, சவரிராயன் அவர்கள் இங்கிலாந்து மற்றும் ஸ்காட்லாந்து நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார். குறிப்பாக, ஸ்காட்லாந்தின் புகழ்பெற்ற எடின்பரோ (Edinburgh) பல்கலைக்கழகத்தில் உயர் மருத்துவக் கல்வி பயில்வதே அவரது முதன்மை நோக்கமாக இருந்தது. அந்த காலகட்டத்தில், மேற்கத்திய மருத்துவ முறைகளில் நிபுணத்துவம் பெறுவது என்பது இந்திய மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்குவதற்கான வழியாக அவர் கருதினார்.

### டாக்டர் எர்னஸ்ட் பாட்டன் உடனான சந்திப்பு:

சவரிராயன் அவர்கள் ஸ்காட்லாந்தில் இருந்தபோதுதான், அவரது வாழ்வை மாற்றியமைத்த அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. அங்கு அவர் டாக்டர் எர்னஸ்ட் பாட்டன் (Dr. Ernest Paton) என்ற இளைஞரைச் சந்தித்தார். டாக்டர் பாட்டன் இங்கிலாந்தின் ஒரு பெரும் தொழிலதிபர் குடும்பத்தைச் சேர்ந்தவர். வசதியான பின்னணியைக் கொண்டிருந்த போதிலும், பாட்டன் எளிய வாழ்வின் மீதும், ஏழை மக்களுக்குச் சேவை செய்வதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவராக இருந்தார்.

இருவருக்கும் இடையே இருந்த பொதுவான ஆன்மீகச் சிந்தனைகளும், மனிதநேயப் பண்புகளும் அவர்களை மிக நெருக்கமான நண்பர்களாக்கியது. அவர்கள் இருவரும் 'மாணவர் கிறிஸ்தவ இயக்கத்தில்' (Student Christian Movement) இணைந்து செயல்பட்டபோது, ஒருவருக்கொருவர் தங்கள் கனவுகளைப் பகிர்ந்து கொண்டனர்.

### உருவான புதிய தரிசனம்:

டாக்டர் பாட்டன் மற்றும் சவரிராயன் ஆகிய இருவருக்குமே ஒரு தெளிவான பார்வை இருந்தது. இந்தியாவில் அப்போது நிலவிய மிஷனரி மருத்துவ முறைகள் பெரும்பாலும் மேற்கத்திய பாணியிலேயே இருந்தன. அந்த முறைகளை மாற்றி, இந்தியக் கலாச்சாரம் மற்றும் கிராமப்புறச் சூழலுக்கு ஏற்றவாறு மருத்துவச் சேவையைக் கொண்டு செல்ல வேண்டும் என்று அவர்கள் விவாதித்தனர்.

வெள்ளைக்காரரான பாட்டன், இந்தியாவிற்கு வந்து இந்தியர்களுடனே ஒரு இந்தியராக வாழ்ந்து சேவை செய்ய முன்வந்தார். இந்தத் தீர்மானம் அன்றைய காலகட்டத்தில் மிகவும் வியக்கத்தக்க ஒன்றாகக் கருதப்பட்டது. இருவரும் இணைந்து 'இந்திய கிராமப்புற ஏழை மக்களுக்குத் தங்கள் வாழ்வை அர்ப்பணிப்பது' என்று ஒரு புனிதமான உடன்படிக்கையைச் செய்துகொண்டனர்.

**'பெரியண்ணன் – சின்னண்ணன்' உறவு:**

அவர்களின் நட்பு ஒரு சாதாரண நண்பர்கள் என்ற நிலையைக் கடந்து, ஒரு குடும்ப உறவாக மலர்ந்தது. டாக்டர் பாட்டன், சவரிராயனை விட வயதில் மூத்தவர் என்பதால், சவரிராயன் அவரை அன்போடு 'பெரியண்ணன்' என்று அழைத்தார். அதற்குப் பிரதிபலனாக, டாக்டர் பாட்டன் சவரிராயனை 'சின்னண்ணன்' என்று அழைத்தார்.

மேற்கத்தியர் - இந்தியர் என்ற நிற மற்றும் இன வேறுபாடுகளைத் தகர்த்தெறிந்து, இருவரும் சகோதரர்களாக ஒன்றிணைந்தனர். இந்த உறவுதான் பின்னாளில் அவர்கள் திருப்பத்தூரில் நிறுவிய 'கிறிஸ்துகுல ஆசிரமத்தின்' ஆணிவேராக அமைந்தது.

**முடிவுரை:**


1910-ல் தொடங்கிய இந்த ஐரோப்பியப் பயணம், டாக்டர் சவரிராயனுக்கு வெறும் பட்டங்களை மட்டும் வழங்கவில்லை; மாறாக, ஒரு உன்னதமான நண்பரையும், வாழ்நாள் முழுவதும் இணைந்து செயல்படுவதற்கான ஒரு மகத்தான நோக்கத்தையும் வழங்கியது. டாக்டர் பாட்டன் மற்றும் டாக்டர் சவரிராயன் ஆகிய இரு துருவங்களின் சங்கமம், இந்திய மருத்துவ வரலாற்றில் 'திருப்பத்தூர் ஆசிரமம்' என்ற ஒரு பெரும் ஆலவிருட்சம் வளரக் காரணமாக அமைந்தது.

**மன்னா செல்வகுமார்**


## Visit us

No. 99/14, 99/15
ASAR Campus, Aladipatti Road,
Surandai – 627859,
Tenkasi District,
Tamil Nadu, South India.

+91-91767-80001
christianhistorical@gmail.com
https://christianhistoricalsociety.in/

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

**மாத ஆய்விதழ் சந்தா விபரம்**

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

**வங்கி விபரம்**

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL

A/c Number : 1748 020000 5614

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
90420 15221 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
( CHRISTAVA VARALATRU SUVADUGAL )
என்ற பெயரில் எடுக்கவும்


**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com




# திருநெல்வேலி திருச்சபையின் வரலாறு-18

திருமதி. ரெமினா சுஜித்

## திருநெல்வேலி திருச்சபையின் வரலாறு - பகுதி 18

### திருநெல்வேலி திருச்சபையின் மறுசீரமைப்பு

முந்தைய அத்தியாயத்தின் இறுதியில், பிஷப் மிடில்டன் சந்தித்த பிராமணர்களைப் பற்றிக் குறிப்பிட்ட பிறகு, 'ஆனால், மகிழ்ச்சியான பகுதி இனிமேல்தான் வரவிருக்கிறது' என்ற ஒரு வரியுடன் முடித்திருந்தோம். அந்த மகிழ்ச்சியான பகுதி எதுவாக இருக்கும் என்ற ஆவலுடன் காத்திருந்த வாசகர்களுக்கு, இதோ அதன் தொடர்ச்சி. ஒருபுறம், தங்கள் மதத்தின் தேவைகளுக்காகப் பிராமணர்கள் பிஷப்பைச் சந்தித்த அதே வேளையில், மறுபுறம் முற்றிலும் எதிர்பாராத, மனதிற்கு இதமான ஒரு சந்திப்பு அவருக்காகக் காத்திருந்தது.

அந்த நிகழ்வை பிஷப் மிடில்டன் தனது கடிதத்தில் இவ்வாறு தொடர்கிறார்:

'என்னுடன் தஞ்சாவூரில் சேர்ந்துகொண்ட தாவீது என்றொரு எழுத்தர் இருக்கிறார் (இவர், சங்கத்தின் வெளியீட்டில் நீங்கள் பிரசங்கத்தைக் கண்ட சத்தியநாதன் அவர்களின் குமாரன்). சற்றுத் தள்ளி நின்றுகொண்டிருந்த ஒரு குழுவினர், பாளையங்கோட்டையிலிருந்து என்னைக் கண்டு ஆசீர்வாதம் பெற வந்த கிறிஸ்தவர்கள் என்று அவர் எனக்குத் தெரிவித்தார். நான் அவர்களைச் சந்திக்க முன்னோக்கிச் சென்றேன். அவர்களுக்கு அவர்களின் சுதேசி குருவானவரும், எனது எழுத்தர் தாவீதும் தலைமை தாங்கினர். அங்கே சுமார் முப்பது பேர் இருந்தனர், அவர்கள் திரு. கோல்ஹாஃபின் கண்காணிப்பில் இருந்த மிகவும் தொலைதூரச் சபையைச் சேர்ந்தவர்கள். அந்த சுதேசி குருவானவர் மிகவும் சுவாரஸ்யமான மனிதர். எனக்குச் சரியாக நினைவிருந்தால், அவரது முகம், கல்கத்தாவில் 1200 மைல்களுக்கு அப்பால் இருக்கும் 'கேவின்ஸ் லைவ்ஸ்' (Cave's Lives) என்ற நூலில் உள்ள புனித சிப்ரியானின் தலையை ஒத்திருந்தது; நான் கண்டதிலேயே மிகவும் கரிய நிறம் கொண்டவராக அவர் இருந்தார். அவர் தனது மக்கள் சார்பாக என்னிடம் பேசினார். அதற்குப் பதிலாக, நான் அவர்களுக்குப் பொருத்தமான ஒரு அறிவுரையைக் கொடுத்தேன், அதை தாவீது மிகுந்த ஆற்றலுடன் மொழிபெயர்த்தார். அவர்களும் மிகுந்த நன்றியுணர்வின் அறிகுறிகளுடன் அதை ஏற்றுக்கொண்டனர். பின்னர் அவர்கள் தங்கள் தமிழ் ஜெப புத்தகங்களைத் திறந்து, ஹாக்னியில் (Hackney) பயன்படுத்தப்படும் ஒரு மெட்டில் நன்றிப் பாடல் ஒன்றைப் பாடினார்கள். அது மிகவும் சரியாகவும், நல்ல சுருதியுடனும், இனிமையாகவும் இருந்தது. பிராமணர்கள் இந்தக் காட்சியைக் கண்டனர், பின்னர் இரு தூதுக்குழுக்களும் ஒன்றாக முகாமை விட்டுப் புறப்பட்டுச் சென்றனர்.' பிஷப் பாளையங்கோட்டைக்கு வருவதற்கு முன்பாகத் தனது கடைசி முகாமில் இந்தத் தூதுக்குழுக்களைச் சந்தித்திருந்தார். கர்னல் டிரொட்டர் (Col. Trotter), போலேவுக்கு (Pohle) எழுதிய ஒரு கடிதத்தின் மூலம், பிஷப் பாளையங்கோட்டையிலும் மிஷனின் சில

பணிகளைப் பார்வையிட்டார் என்பதை நாம் அறிகிறோம். பிஷப் மேற்கண்ட கடிதத்தை எழுதிய மறுநாளான சனிக்கிழமையன்று, அவர் கர்னல் டிரொட்டருடன் காலை உணவருந்தினார்.

அதன் பிறகு,'நான் அவரைத் தேவாலயத்திற்கு அழைத்துச் சென்றேன். தேவாலய வளாகத்தின் நுழைவாயிலில், உள்ளூர் குருவானவர், உபதேசியார்கள் மற்றும் அனைத்துக் கிறிஸ்தவர்களும் ஒரு பாடல் பாடியவாறு இரண்டு வரிசைகளில் நின்றிருந்தனர். பள்ளி மாணவர்கள் அனைவரும் தங்கள் ஓலைச் சுவடிகளுடன் தரையில் அமர்ந்திருந்தனர். அவர் அந்தச் சிறிய தேவாலயத்தைப் பார்வையிட்டு, அதன் எல்லாப் பகுதிகளையும் பார்த்து, பல கேள்விகளைக் கேட்டார். ஒரு காலத்தில் ஒரு வீடு இருந்து இப்போது இடிந்துவிட்ட மிஷன் நிலத்தையும் தோட்டத்தையும் அவருக்குக் காட்டினேன். நமது இந்திய முறையைக் காட்ட மணலில் எழுதச் சொல்லி பள்ளி மாணவர்களிடம் நான் கூறினேன். மெட்ராஸ் கல்வி முறை இவ்வளவு சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டு அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். ஏனெனில் அவர் திரு. லான்காஸ்டர் மற்றும் டாக்டர் பெல் ஆகியோருக்கு இடையேயான சர்ச்சைகளைக் குறிப்பிட்டார், மேலும் அவர் டாக்டர் பெல்லின் பக்கமே இருப்பதாகத் தோன்றியது. அவர் மிகவும் ஆர்வமாகப் பல கேள்விகளைக் கேட்டார்.' பிஷப் அந்த ஞாயிற்றுக்கிழமை முழுவதும் பாளையங்கோட்டையில் தங்கியிருந்தார், மேலும் அவரது தங்குமிடத்தில் தெய்வீக ஆராதனை நடத்தப்பட்டது என்று குறிப்பிடுகிறார்.

பிஷப் மிடில்டனின் சுருக்கமான வருகைக்குச் சில மாதங்களுக்குப் பிறகு, திருநெல்வேலி திருச்சபையின் 'இரண்டாம் நிறுவனர்' என்று நியாயமாக அழைக்கப்படக்கூடிய ஒரு நபர் பாளையங்கோட்டைக்கு வந்து சேர்ந்தார். அவர்தான் ரெவரெண்ட் ஜேம்ஸ் ஹஃப் (Rev. James Hough). S.P.C.K. பணியைப் புத்துயிர் பெறச் செய்ததோடு, திருநெல்வேலி திருச்சபைக்கு C.M.S. (சர்ச் மிஷனரி சொசைட்டி) தனது நீண்ட மற்றும் மகத்தான சேவைகளைத் தொடங்கக் காரணமாகவும் இருந்தவர் இவரே. திரு. ஹஃப் 1789-ல் பிறந்து, 1814-ல் குருத்துவ அபிஷேகம் பெற்றார். குருத்துவப் பட்டம் பெறுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, அவர் தன்னை மிஷனரிப் பணிக்கு அர்ப்பணிக்க விரும்பினார். 1815-ல், அவர் மாபெரும் சுவிசேஷத் தலைவர் சார்லஸ் சிமியோனைச் (Charles Simeon) சந்தித்தார். சிமியோன், இந்தியாவில் குருவானவர்களாகப் பணியாற்றத் ஆர்வமுள்ள இளம் சுவிசேஷ ஊழியர்களைத் தேடிக்கொண்டிருந்தார். அவர் மூலம், திரு. ஹஃப் கம்பெனியின் கீழ் ஒரு குருவானவராக நியமனம் பெற்றார். அவர் ஆகஸ்ட் 1816-ல் மெட்ராஸ் வந்தடைந்தார், பாளையங்கோட்டைக்கு இராணுவ குருவானவராக (Military Chaplain) நியமிக்கப்பட்டு, நவம்பர் 2-ஆம் தேதி அந்தப் பணித்தளத்தை அடைந்தார். அங்கு மிஷனின் நல்ல நண்பரான கமாண்டன்ட் கர்னல் டிரொட்டர் அவரை வரவேற்றார்.

வந்தவுடனேயே, அவர் சர்ச் மிஷனரி சொசைட்டியுடன் (CMS) இணைந்து மிஷனரிப் பள்ளிகளை உருவாக்கும் பணியைத் தொடங்கினார். அந்த நேரத்தில் C.M.S. தென்னிந்தியாவில் பல ஆண்டுகளாகப் பணியாற்றிக் கொண்டிருந்தது. 1810-ல் தரங்கம்பாடி ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டபோது, டென்மார்க்கிலிருந்து வரும் உதவி நிறுத்தப்பட்டதால், தரங்கம்பாடி மிஷன் கடுமையான நெருக்கடியில் இருந்தது. அப்போது, 1812-ல் C.M.S. அதன் பள்ளிகளுக்கு மானியம் வழங்கி உதவியது. மேலும், அங்கு எஞ்சியிருந்த இரண்டு மிஷனரிகளான மூத்த குருவானவர் ஏ.எஃப். கெமரர் (Rev. A.F. Caemmerer) மற்றும் டாக்டர் ஜான் ஆகியோரில், பிந்தையவர் மிகவும் வயதானவராகவும் பலவீனமாகவும் இருந்தார். 1814-ல் C.M.S. தனது உதவியை விரிவுபடுத்தி, ரேனியஸ் மற்றும் ஷ்னாரே (Rhenius and Schnarre) ஆகியோரைத் தரங்கம்பாடிக்கு அனுப்பி, தென்னிந்தியாவில் நேரடியாகப் பணியைத் தொடங்கியது. அதே ஆண்டு நவம்பரில், மெட்ராஸில் சங்கத்தின் ஒரு கடிதத் தொடர்பு குழு (Corresponding Committee) உருவாக்கப்பட்டது. அதன் உறுப்பினர்களிடையே, தங்கள் முதன்மைப் பணிகளுக்கு இடையூறு ஏற்படாத வரையில், 'சங்கத்தின் நோக்கங்களைச் செயல்படுத்துவதில் தீவிரமாக ஈடுபடத் தயாராக' இருந்த குருவானவர்களும் இருந்தனர். 1818-ல் வெளியிடப்பட்ட மெட்ராஸ் கடிதத் தொடர்பு குழுவின் முதல் ஆண்டு அறிக்கை, 'குருவானவர்களின் பணித்தளங்கள்' என்ற தலைப்பின் கீழ் மசூலிப்பட்டினம், வேலூர், சித்தூர், தலச்சேரி மற்றும் பாளையங்கோட்டை குருவானவர்களின் அறிக்கைகளை உள்ளடக்கியிருந்தது.

குருவானவர் ஹஃப் பாளையங்கோட்டைக்கு வந்து இரண்டு மாதங்களுக்குள், அங்கு ஒரு ஆங்கிலப் பள்ளியைத் திறந்தார். அதில் பொது ஊழியர்கள் மற்றும் பட்டாலியனின் சுதேசி அதிகாரிகளின் குழந்தைகள் பயின்றனர். மேலும் அங்கு ஒரு தமிழ்ப் பள்ளியையும், 1817 ஜூலையில் பாளையங்கோட்டையில் மற்றொரு தமிழ்ப் பள்ளியையும் திறந்தார். இந்தப் பள்ளிகளுக்காகத் தனது சொந்தச் செலவில் இரண்டு வகுப்பறைகளைக் கட்டினார், ஒரு இந்திய ஆசிரியரைப் பயிற்சிக்காகத் தரங்கம்பாடிக்கு அனுப்பினார், ஒரு ஆங்கிலப் பள்ளி ஆசிரியரை நியமித்தார், மேலும் அந்த ஆண்டின் பிற்பகுதியில், முன்பு திரு. சாயரால் (Mr. Sawyer) ஆதரிக்கப்பட்ட மற்றொரு இந்திய ஆசிரியரையும் தனது நிறுவனத்தில் சேர்த்துக் கொண்டார். செப்டம்பர் 1817-ல்,

மூன்று பள்ளிகளிலும் மொத்தமாக 169 மாணவர்கள் இருந்தனர். இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு மத்தியில் இந்த வேலையை ஆதரிக்க நன்கொடை வழங்குமாறு பாளையங்கோட்டையில் வசித்த ஆங்கிலேயர்களை சமதிக்க வைப்பதற்கு அவர் எடுத்த முதல் முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

ஆனால், அவர் எழுதுவது போல், 'இறுதியாக, ஆட்சியர், ஜான் காட்டன் எஸ்கொயர் (John Cotton Esq.), கொச்சியில் உள்ள ஒரு பள்ளிக்கு நன்கொடை கோரி ஒரு விண்ணப்பத்தைப் பெற்றபோது, அத்தகைய நிறுவனங்களை ஆதரிக்க விரும்பினால், அவர்கள் தங்கள் சொந்த குருவானவரின் பள்ளிகளிலிருந்து தொடங்க வேண்டும் என்று கருதினார். அதன் விளைவாக, என்னென்ன செய்யப்பட்டுள்ளது என்பது குறித்துத் தெரிவிக்குமாறு அவர் கேட்டு, ஏற்பட்ட செலவுகளுக்குத் தாராளமாகப் பங்களித்தார். அவரது முன்மாதிரியை அவரது அண்டை வீட்டாரும் பின்பற்றினர்; அன்றிலிருந்து அவர்கள் பள்ளிகளின் பராமரிப்பிற்காக ஆண்டுதோறும் சந்தா செலுத்தினர்.' உண்மையில், 1817-ஆம் ஆண்டில் பாளையங்கோட்டையில் ரூ.300 சந்தாவாகச் சேகரிக்கப்பட்டது.

ஜூன் 1818-ல், பல பெற்றோரின் வேண்டுகோளின் பேரில், குருவானவர் ஹஃப் திருநெல்வேலியில் இரண்டாவது ஆங்கிலப் பள்ளியைத் திறந்தார். மேலும் ஜூலை மற்றும் டிசம்பர் மாதங்களில் தாழையூத்து (Tachanallur) மற்றும் மேலப்பாளையம் ஆகிய இடங்களில் தமிழ்ப் பள்ளிகளைத் திறந்தார். இரண்டு ஆங்கிலப் பள்ளிகளிலும் புதிய ஏற்பாடு, சங்கீத புத்தகம் மற்றும் செல்லனின் பைபிள் வரலாறு (Sellon's History of the Bible - செல்லனின் பைபிள் வரலாறு ரெவரெண்ட் செல்லோன் (Rev. Sellon) என்பவரால் எழுதப்பட்டது) ஆகியவை பயன்படுத்தப்பட்டது. அவர் அந்த ஆண்டின் தொடக்கத்தில் தூத்துக்குடியில் ஒரு பள்ளியைத் திறந்தார், ஆனால் ஒரு புராட்டஸ்டன்ட் பள்ளி ஆசிரியரை நியமிப்பதற்கு ரோமன் கத்தோலிக்கர்களிடமிருந்து எதிர்ப்பு வந்ததால், இறுதியில் அவர் ஒரு இந்து ஆசிரியரை நியமிக்க வேண்டியிருந்தது. அந்தப் பள்ளி வெற்றிபெறவில்லை, சுமார் ஒரு வருடத்திற்குப் பிறகு மூடப்பட்டது. மெட்ராஸ் கடிதத் தொடர்பு குழு பள்ளி வேலைகளுக்காக ரூ.300 மானியம் வழங்கியது. அதே ஆண்டில், திரு. ஹஃப் மற்றொரு முக்கியமான தொடக்கத்தைச் செய்தார்: வருங்கால உபதேசியார்களை உருவாக்கும் நோக்கில் கிறிஸ்தவ சிறுவர்களுக்காகப் பாளையங்கோட்டையில் ஒரு பயிற்சிப் பள்ளியைத் (seminary) தொடங்கினார்...

1808 முதல் 1816 வரையிலான சோதனைக் காலத்திற்குப் பிறகு, பிஷப் மிடில்டனின் வருகை திருநெல்வேலி திருச்சபைக்கு ஒரு புதிய நம்பிக்கையை அளித்தது. அவர் சந்தித்த சுதேசி குருவானவரும், ஒழுங்காகப் பாடல்களைப் பாடிய விசுவாசிகளும், அந்தக் கடினமான காலத்திலும் விசுவாசத்தின் சுடர் அணையாமல் இருந்ததைக் காட்டுகிறது. அதைத் தொடர்ந்து, 'திருச்சபையின் இரண்டாம் நிறுவனர்' என்று போற்றப்படும் Rev. ஜேம்ஸ் ஹஃபின் வருகை, ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்கி வைத்தது. மேய்ப்பன் இல்லாத மந்தைக்கு வழிகாட்ட கர்த்தர் ஒரு மேய்ப்பரைக் கொண்டுவந்தார்; இருளில் மூழ்கியிருந்த மக்களுக்குக் கிறிஸ்து என்னும் ஒளிவிளக்கு ஏற்றப்பட்டது. தேவாலயங்கள் கட்டுதல், ஆராதனைகளை நடத்துதல் என்று அதோடு நின்றுவிடாமல், கல்விப் பணியின் மூலம் சமூகத்தின் அடித்தளத்தையே மாற்றியமைக்க அவர் எடுத்த முயற்சிகள் திருநெல்வேலி திருச்சபையின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அன்று, கர்த்தரின் வார்த்தையை அடித்தளமாகக் கொண்டும், மக்கள் அழிந்துபோகக் கூடாதே என்ற ஆத்தும பாரத்தோடும், மிஷனெரிகளின் அயராத உழைப்பினாலும் அநேக கல்விக்கூடங்கள் உருவாக்கப்பட்டன. இன்று நம்மில் பலர் அடைந்திருக்கும் வளர்ச்சிக்கும், பெற்றிருக்கும் கல்விக்கும் அந்த ஸ்தாபனங்களே முக்கிய காரணம். நம்மில் அநேகர் அதன் பயனாளிகளே! ஆனால், இத்தருணத்தில் நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான கேள்வி உள்ளது: தியாகத்தால் கட்டப்பட்ட அந்தப் பல கல்விக்கூடங்களின் இன்றைய நிலை என்ன? அன்று இருந்த அந்த ஆவிக்குரிய பாரமும், கல்விச் சேவையும் தொடர்ந்து காணப்படுகிறதா? காணப்பட்டால் தேவனுடைய நாமத்திற்கே மகிமை உண்டாகட்டும்'

குருவானவர் ஹஃப் தொடங்கிய இந்தப் பள்ளிகள் எவ்வாறு வளர்ந்தன? C.M.S. மிஷனரிகளின் வருகை திருநெல்வேலியில் ஏற்படுத்திய தாக்கம் என்ன? உபத்திரவத்தின் சாம்பலிலிருந்து திருச்சபை எவ்வாறு புத்துயிர் பெற்று எழுந்தது? என்பதை அடுத்த இதழில் விரிவாகக் காண்போம்.

**பள்ளிகளைக் கட்டியது வெறும் செங்கற்களால் அல்ல, அழியாத ஆத்தும பாரத்தால்;**

**மிஷனரிகளின் அந்தத் தொலைநோக்குத் தரிசனத்தை மீண்டும் நம் சபைகளில் உயிர்ப்பிப்போம்!**

*தொடர்ந்து பயணிப்போம்...*

# கிறிஸ்தவக் காணிக்கை:
## ஒரு வாழ்வியல் நெறி

மன்னா செல்வகுமார்

திருச்சபையின் வளர்ச்சிக்கும், விசுவாசிகளின் ஆன்மீக முதிர்ச்சிக்கும் 'கொடுத்தல்' அல்லது 'காணிக்கை அளித்தல்'என்பதுமிகஅவசியமானஒன்றாகும். இந்தியாவின் முதல் ஆங்கிலிக்கன் பிஷப் வி. எஸ். அசரியா, தனது அனுபவத்தின் வாயிலாகவும் வேதாகமப் பின்னணியிலும் காணிக்கை குறித்த தவறான புரிதல்களைக் களைந்து, அதன் உண்மையான நோக்கத்தை விளக்குகிறார்.

**1. காணிக்கையின் அடிப்படை நோக்கம்:**

காணிக்கை என்பது ஏதோ திருச்சபைக்குச் செய்யும் உதவியோ அல்லது ஒரு வரியோ அல்ல. மாறாக, **'பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது'** (சங்கீதம் 24:1) என்ற உண்மையை நாம் அங்கீகரிப்பதே இதன் அடிப்படை. நாம் பெற்றிருக்கும் அனைத்தும் கடவுள் நமக்குக் கொடுத்தது என்பதையும், நாம் வெறும் **'பராமரிப்பாளர்கள்'** (Stewards) என்பதையும் இது நினைவுறுத்துகிறது.

**2. வேதாகமப் பின்னணி:**

பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர்கள் தங்கள் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை (தசமபாகம்) கடவுளுக்கு அளித்தனர். புதிய ஏற்பாட்டில், இயேசு கிறிஸ்து தனது உயிரையே நமக்காகக் கொடுத்ததுதான் (2 கொரிந்தியர் 8:9) காணிக்கைக்கு மிகச்சிறந்த உதாரணமாகப் பார்க்கப்படுகிறது. எதைக் கொடுக்கிறோம் என்பதை விட, எந்த மனநிலையில் கொடுக்கிறோம் என்பதே முக்கியம் என்பதை இயேசுவின் போதனைகள் வலியுறுத்துகின்றன.

**3. காணிக்கை ஒரு 'கிருபை' (Grace):**

பிஷப் அசரியா காணிக்கையை ஒரு கடமையாகப் பார்க்காமல், ஒரு 'கிருபையாகப்'பார்க்கிறார். மக்கெதோனியா நாட்டு திருச்சபையினர் தங்கள் மிகுந்த வறுமையிலும், மிகுந்த சந்தோஷத்தோடு தாராளமாகக் கொடுத்ததை (2 கொரிந்தியர் 8:2) அவர் முன்னுதாரணமாகக் காட்டுகிறார். கட்டாயத்தின் பெயரில் கொடுப்பது காணிக்கையாகாது; அது மனப்பூர்வமான அன்பின் வெளிப்பாடாக இருக்க வேண்டும்.

**4. தற்சார்பு திருச்சபையின் அவசியம் (Self-Support):**

ஆரம்ப காலத்தில் இந்தியத் திருச்சபைகள் மேலைநாட்டு நிதியுதவியையே பெரிதும் நம்பியிருந்தன. ஒரு திருச்சபை உண்மையாக வளர வேண்டுமெனில், அது தனது சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்று அசரியா வாதிடுகிறார். எளிய மக்களும் தங்களால் இயன்றதைச் சபைக்குக் கொடுக்கும்போது, அந்தச் சபை சுய மரியாதையுடனும், சுதந்திரமாகவும் செயல்பட முடியும் என்பதைப் பல வரலாற்று உதாரணங்களோடு (கரேனியர் மற்றும் படாக் திருச்சபைகள்) அவர் விளக்குகிறார்.

**5. நடைமுறை ஆலோசனைகள்:**

இந்தியச் சூழலுக்கு ஏற்றவாறு காணிக்கை முறைகளை அசரியா முன்மொழிகிறார்:

1. **பிடி அரிசித் திட்டம்:** ஒவ்வொரு வேளை சமைக்கும்போதும் ஒரு பிடி அரிசியைச் சேமித்து வைத்தல்.
2. **முதற்பலன் மற்றும் அறுவடைப் பண்டிகை:** விளைச்சலின் முதல் பங்கையும், கால்நடைகளின் முதல் குட்டியையும் கடவுளுக்குப் படைத்தல்.
3. **ஒழுங்கான காணிக்கை:** வாரந்தோறும் அல்லது மாதந்தோறும் திட்டமிட்டு காணிக்கை அளித்தல்.
4. **பணம் கையாளுதல்:** சபைப்பணம் நேர்மையாகவும், வெளிப்படையாகவும் கையாளப்பட வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்துகிறார்.

**6. ஆன்மீக ஆசீர்வாதங்கள்:**

கொடுப்பதினால் ஒரு விசுவாசி வறுமைப்பட்டுப் போவதில்லை; மாறாக, அது ஆன்மீக ரீதியில் அவனை வளப்படுத்துகிறது. கடவுளோடு நமக்குள்ள உறவை இது உறுதிப்படுத்துகிறது. காணிக்கை என்பது கடவுளுக்கு நாம் காட்டும் நன்றிப் பலியாகும்.

பிஷப் அசரியாவின் 'Christian Giving' நூல், கொடுப்பது என்பது ஒரு சடங்கு அல்ல, அது ஒரு ஆராதனை என்பதைத் தெளிவாகப் பறைசாற்றுகிறது. திருச்சபை தற்சார்பு அடையவும், விசுவாசிகள் தங்கள் பொறுப்பை உணர்ந்து செயல்படவும் இந்த நூல் இன்றும் ஒரு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கிறது. **'உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்'** என்பதே இந்த நூலின் மையச் செய்தியாகும்.

# திருநெல்வேலியின் திருத்தூதர்: பேராயர் ஜார்ஜ் தியோடர் செல்வின்



**மன்னா செல்வகுமார்**

திருநெல்வேலி மக்களின் மனங்களில் 'உடல் மற்றும் ஆன்மாவின் மருத்துவர்' (Doctor of Body and Soul) என்று ஆழமாகப் பதிந்தவர் பேராயர் ஜார்ஜ் தியோடர் செல்வின். இங்கிலாந்தில் பிறந்தவராக இருந்தாலும், தன் வாழ்நாள் முழுவதையும் தமிழகத்தின் தென்கோடியில் உள்ள மக்களுக்காக அர்ப்பணித்த ஒரு மகத்தான மனிதரின் வரலாறு இது.

### பிறப்பும் கல்வியும்:

ஜார்ஜ் தியோடர் செல்வின் 1887-ஆம் ஆண்டு ஜூலை 30-ஆம் நாள் இங்கிலாந்தின் நாட்டிங்காம் நகரில் பிறந்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் புகழ்பெற்ற கார்பஸ் கிறிஸ்டி கல்லூரியில் பயின்ற அவர், கல்வியில் மட்டுமின்றி விளையாட்டிலும் (Rowing - படகுப் போட்டி) சிறந்து விளங்கினார். 1910-ல் குருத்துவப் பட்டம் பெற்று, லண்டனில் சில ஆண்டுகள் பணியாற்றிய பிறகு, திருநெல்வேலி மறைமாவட்டத்தில் நிலவிய ஊழியர் பற்றாக்குறையை அறிந்து, 1912-ல் மிஷனரியாக இந்தியா வந்தார்.

### உடல் மற்றும் ஆன்மாவின் மருத்துவர் (1917 காலரா பணி):

செல்வின் அவர்களின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது 1917-ஆம் ஆண்டு திருநெல்வேலியில் பரவிய காலரா நோய். தெருக்களில் பிணங்கள் விழுந்து கிடந்த அந்தப் பயங்கரமான சூழலில், மக்கள் அஞ்சி ஓடியபோது, இளம் மிஷனரியான செல்வின் துணிச்சலுடன் களமிறங்கினார். பொட்டாசியம் பெர்மாங்கனேட் மருந்தையும், ஜெபத்தையும் மட்டுமே ஆயுதமாகக் கொண்டு, பாதிக்கப்பட்டவர்களின் குடிசைகளுக்குச் சென்று அவர்களுக்குப் பணிவிடை செய்தார். இவருடைய இடைவிடாத சேவையால் நூற்றுக்கணக்கானோர் உயிர் பிழைத்தனர். இதனால் நெல்லை மக்கள் இவரை 'அதிசய மனிதர்' என்றும், 'உடல் மற்றும் ஆன்மாவின் மருத்துவர்' என்றும் அன்போடு அழைத்தனர்.

### கல்விப் பணியும் நிறுவன வளர்ச்சியும்:

1. பேராயர் செல்வின் ஒரு சிறந்த கல்வியாளர். அவர் பல கல்வி நிறுவனங்களின் தலைவராகப் பொறுப்பு வகித்துள்ளார்:
2. ஆயர் சார்ஜென்ட் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி: சுமார் 24 ஆண்டுகள் இங்கு தலைமையாசிரியராகப் பணியாற்றி, ஆயிரக்கணக்கான ஆசிரியர்களை உருவாக்கினார்.
3. புனித ஜான் கல்லூரி, பாளையங்கோட்டை: இக்கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றியபோது, நிதி நெருக்கடியில் இருந்த கல்லூரியை மீட்டெடுத்து, அதனை ஒரு 'முதல் தரக் கல்லூரியாக' (First Grade Col-

lege) உயர்த்தினார்.

4. மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் ஆன்மீக வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டினார். இவரிடம் பயின்ற மாணவர்கள் இன்றும் 'செல்வினின் சிறுவர்கள்' (Selwyn's Boys) என்று பெருமையுடன் அழைக்கப்படுகிறார்கள்.

**இந்தியமயமாதலும் எளிமையும்:**

பேராயர் செல்வின் ஒரு வெள்ளைக்காரராக இருந்தாலும், இந்திய கலாச்சாரத்தைத் முழுமையாக ஏற்றுக்கொண்டார். வேட்டி அணிவது, தரையில் அமர்ந்து உணவு உண்பது, எளிய தமிழ் உணவை விரும்புவது என அவர் 'இந்தியர்களை விட அதிக இந்தியராக' (More Indian than Indians) வாழ்ந்தார். தனது சொந்த வருமானம் மற்றும் சொத்துக்களை ஏழை மாணவர்களின் கல்விக்காகவே செலவிட்டார். 'செல்வின் ஆசிரமம்' போல அவரது இல்லம் எப்போதும் ஏழைகளுக்காகவும், மாணவர்களுக்காகவும் திறந்து கிடந்தது.

**ஒற்றுமையின் தூதுவர் (சபை இணைப்பு):**

பிரிந்து கிடந்த திருச்சபைகளை இணைப்பதில் அவர் முக்கியப் பங்காற்றினார். 1925-ல் திருநெல்வேலி மறைமாவட்டத்தில் ஏற்பட்ட பிளவுகளைத் தீர்த்து ஒற்றுமையை நிலைநாட்டினார். 1947-ல் 'தென்னிந்தியத் திருச்சபை' (Church of South India - CSI) உருவாவதற்கான பேச்சுவார்த்தைகளில் முன்னின்று உழைத்தார். சி.எஸ்.ஐ (CSI) அமைக்கப்பட்ட பிறகு, அதன் முதல் திருநெல்வேலி பேராயராகப் பொறுப்பேற்று வழிநடத்தினார்.

**இறுதி நாட்களும் மறைவும்:**

சுமார் 40 ஆண்டுகள் தமிழகத்தில் பணியாற்றிய பேராயர் செல்வினின் உடல்நிலை 1952-ல் பாதிக்கப்பட்டது. மருத்துவர்களின் அறிவுரைப்படி 1953-ல் ஓய்வு பெற்றார். ஓய்வு காலத்திலும் மாணவர்களுக்குப் போதிப்பதையே நோக்கமாகக் கொண்டு சென்னை மெஸ்டன் கல்லூரியில் தங்கியிருந்தார். 1957-ஆம் ஆண்டு மே மாதம் 30-ஆம் நாள் (இயேசுவின் விண்ணேற்றத் திருநாள் அன்று) அவர் இறைவனடி சேர்ந்தார். அவரது உடல் சென்னை புனித ஜார்ஜ் கோட்டை பேராலய (St. George's Cathedral) கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது.

பேராயர் செல்வின் அவர்களின் வாழ்வு தியாகத்தின் அடையாளம். 'தனது வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக்கூடாது' என்ற விவிலிய வசனத்தின்படி வாழ்ந்தவர் அவர். திருநெல்வேலி மாவட்டத்தின் கல்வி மற்றும் ஆன்மீக வளர்ச்சியில் பேராயர் செல்வினின் பெயர் என்றும் அழியாத கல்வெட்டாக நிலைத்திருக்கும்.

## கிறிஸ்தவ வரலாற்று சங்கம் & யாவே மீடியா

இணைந்து நடத்தும் **'சபையின் கதை!'** நிகழ்ச்சிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

📅 தேதி: மே 21 முதல் 23, 2026

📍 இடம்: கிறிஸ்தவ வரலாற்று சங்க நூலகம், சுரண்டை

👉 கலந்து கொள்ள தயவுசெய்து கீழே உள்ள விவரங்களை நிரப்பவும்.





சங்கை சுவி.

# தாவீது ஐயா:

## ஒரு விசுவாச வீரரின் வரலாற்றுப் பயணம்

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் ஆன்மீக வரலாற்றில் 'அண்ணகர்' (பெரிய அண்ணன்) என்று அன்போடு அழைக்கப்பட்ட சங்கை சுவிசேஷகர் தாவீது ஐயா அவர்கள், ஒரு தன்னலமற்ற இறைப்பணியாளராகவும், சமூகச் சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தவர். சி.எம்.எஸ் (C.M.S) சுத்தாங்க சுவிசேஷ சபையை நிறுவிய முன்னோடிகளில் ஒருவரான இவர், கரிசல் கிராமம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளின் முன்னேற்றத்திற்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர்.

**பிறப்பும் குடும்பப் பின்னணியும்:**

தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகநேரிக்கு மேற்கே உள்ள சுப்பிரமணியபுரத்தில் தாவிது ஐயா அவர்கள் பிறந்தார். இவரது தந்தை சுடலைமாடன் நாடார், ஒரு தீவிர இந்து பக்தராகத் திகழ்ந்தவர். அக்காலத்தில் புகழ்பெற்ற மிஷனரியான கனம் ஜாண் தாமஸ் ஐயர் மூலமாகத் தன் வாழ்வை மாற்றிக்கொண்ட சுடலைமாடன் நாடார், கிறித்தவத்தை ஏற்று 'சுவிசேஷமுத்து' என்று பெயர் மாற்றம் பெற்றார். இவரது பத்தாவது மகனாகப் பிறந்த தாவிது ஐயா, சிறுவயதிலேயே விசுவாசத்திலும் நற்பண்புகளிலும் சிறந்து விளங்கினார்.

**இறைப்பணிக்கான அர்ப்பணிப்பு:**

தாவிது ஐயா தனது 17-வது வயதில், முக்குப்பேரியில் கனம் உவாக்கர் ஐயர் நடத்திய கன்வென்ஷன் கூட்டத்தில் பங்கேற்றபோது, தன்னை முழுமையாக இறைப்பணிக்காக அர்ப்பணித்தார். இவரது அண்ணன் சாமுவேல் நாடார் ஊழியத்திற்குச் செல்ல மறுத்த நிலையில், இளையவரான தாவிது ஐயா 'இதோ அடியேன் இருக்கிறேன்' என்று முன்வந்து ஊழியப் பாதையைத் தேர்ந்தெடுத்தார். தனது 29-வது வயது முதல் 12 ஆண்டுகள் தனது பெற்றோரோடு இருந்து ஊழியம் செய்தார்.

**சுத்தாங்க சுவிசேஷ சபையின் தோற்றம்:**

1924-ஆம் ஆண்டு மே மாதம் 24-ஆம் தேதி, திருநெல்வேலி சி.எம்.எஸ் சுத்தாங்க சுவிசேஷ சபையை நிறுவிய ஆறு முக்கிய பக்தர்களில் தாவிது ஐயா ஒருவராவார். அந்நிய நாட்டு நிதி உதவியின்றி, உள்நாட்டு மக்களின் பங்களிப்போடு சபைகளை வளர்க்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் இவர் செயல்பட்டார். சுமார் 25 ஆண்டுகள் இப்பகுதியின் சபை மேலாளராகப் பணியாற்றினார்.

**கரிசல் கிராமத்தின் மறுமலர்ச்சி:**

தாவிது ஐயாவின் வாழ்வில் 'கரிசல்' கிராமம் மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது. அங்கு அவர் ஆற்றிய

பணிகள் பல்துறைகளிலும் பரவியிருந்தன:

1. **கல்விப் பணி:** ஏழை எளிய மக்கள் கல்வி கற்க வேண்டும் என்பதற்காகத் தன் சொந்த முயற்சியால் கரிசல் சி.எம்.எஸ் தாவிது மெமோரியல் மேல்நிலைப்பள்ளியை உருவாக்கினார். இப்பள்ளி இன்று ஆயிரக்கணக்கான மாணவர்களின் வாழ்வை மாற்றியுள்ளது.

2. **சமூகப் பணி:** ஊரில் நிலவிய பெரிய நிலத் தகராறுகளைச் சமாதானமாகத் தீர்த்து வைப்பதில் இவர் வல்லவராக இருந்தார். திரவியம் நாடார் மற்றும் ஜெயராஜ் நாடார் குடும்பங்களுக்கு இடையே இருந்த நீண்ட கால வயல் தகராறைத் தீர்த்து வைத்தது இவரது சமாதானப் பண்பிற்குச் சான்றாகும்.

3. **நீர் மேலாண்மை:** மழைக்காலங்களில் ஏரி மற்றும் குளங்களின் கரைகள் உடையாமல் இருக்க, இரவோடு இரவாகக் கையில் விளக்குடன் சென்று மக்களைத் திரட்டிப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடுவார்.

**அற்புதங்களும் விசுவாச வாழ்வும்:**

தாவிது ஐயா அவர்களின் முழங்கால் ஜெபம் மிகவும் வலிமையானது. நோயுற்றவர்களுக்காகவும், மழையில்லா காலங்களிலும் இவர் ஜெபித்தபோது பல அற்புதங்கள் நிகழ்ந்ததாக மக்கள் இன்றும் கூறுகின்றனர். மருத்துவர்களால் கைவிடப்பட்ட குழந்தைகளைக் கூட இவரது ஜெபம் குணப்படுத்தியது. 'மண்ணுலகில் தரித்திரராய், ஆவியில் செல்வந்தராய்' வாழ்ந்த இவர், தனக்கென எதையும் சேர்த்துக் கொள்ளாமல் தன் சொத்துக்களை ஊழியத்திற்கே செலவிட்டார்.

**கவிதைப் பணி:**


இவர் ஒரு சிறந்த பாடலாசிரியராகவும் திகழ்ந்தார். நூற்றுக்கணக்கான ஞானக் கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். 'காலை நேரத்தில் கர்த்தன் இயேசுவை கனிவுடன் துதி பாடுகிறேன்' மற்றும் 'இந்த ராத்திரி காலந்தன்னிலும் எந்தன் காவலன் இயேசுவே' போன்ற இவரது பாடல்கள் இன்றும் கிறித்தவ இல்லங்களில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

**இறுதிப் பயணம்:**

தனது 79-வது வயதில், 1950-ஆம் ஆண்டு மார்ச் மாதம் கேரளா மாநிலம் கொட்டாரத்துவிளைக்கு ஊழியத்திற்காகச் சென்றிருந்தபோது, மார்ச் 22-ஆம் தேதி இறைவனடி சேர்ந்தார். இவரது புனித உடல் கரிசல் கிராமத்திற்குக் கொண்டு வரப்பட்டு, பல்லாயிரக்கணக்கான மக்களின் கண்ணீருக்கு மத்தியில் அடக்கம் செய்யப்பட்டது.

சங்கை சுவி. தாவிது ஐயா அவர்கள் ஒரு மனிதராக மட்டும் வாழாமல், ஒரு தத்துவமாக வாழ்ந்து மறைந்தவர். அவரது எளிமை, விசுவாசம் மற்றும் சமூக சேவை ஆகியவை இன்றும் தலைமுறைகளைக் கடந்தும் முன்மாதிரியாகத் திகழ்கின்றன. கரிசல் கிராமம் இன்று கல்வி மற்றும் பொருளாதாரத்தில் அடைந்துள்ள வளர்ச்சிக்குத் தாவிது ஐயா அவர்கள் இட்ட அடித்தளமே முக்கிய காரணமாகும்.

**மன்னா செல்வகுமார்**




கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

+91 91767 80001

### வரலாற்று நாயகன்

# பேராயர் கால்டுவெல்

### ஒரு வரலாற்றுப் பார்வை

அயர்லாந்தில் பிறந்து, ஸ்காட்லாந்தில் வளர்ந்து, தமிழகத்தின் திருநெல்வேலி மண்ணைத் தனது வாழ்விடமாகக் கொண்ட பேராயர் கால்டுவெல், ஒரு மிஷனரியாக மட்டுமல்லாமல், ஒரு சிறந்த மொழியியலாளர், வரலாற்றாசிரியர் மற்றும் சமூக சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தவர்.

**1. மொழி மற்றும் அறிவுசார் பங்களிப்பு:**

இன்றைய திருச்சபை கல்வியிலும் அறிவிலும் சிறந்து விளங்குவதற்கு கால்டுவெல் அவர்கள் இட்ட அடித்தளமே முக்கிய காரணம். 1856-ல் அவர் வெளியிட்ட 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' (A Comparative Grammar of the Dravidian Languages) என்னும் நூல், தமிழ் மொழியின் தொன்மையையும் தனித்துவத்தையும் உலகுக்கு பறைசாற்றியது. திருச்சபை என்பது வெறும் ஆன்மீகத்தோடு நின்றுவிடாமல், மக்களின் கலாச்சாரம் மற்றும் மொழியோடு இணைந்து வளர வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

**2. இடையன்குடியும் மாதிரி கிராமமும்:**

'இடையன்குடி' (The Shepherd's Abode) என்ற சிற்றூரை ஒரு மாதிரி கிறித்தவ கிராமமாக மாற்றிய பெருமை அவருக்கு உண்டு. சாலைகள், கிணறுகள், தெருக்கள் என திட்டமிட்டு அவர் உருவாக்கிய அந்த கிராமம், இன்றைய நவீன சமூக மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஒரு முன்னோடியாகும். அங்கு அவர் கட்டிய பேராலயம், இன்றும் திருச்சபையின் ஒருமைப்பாட்டுக்குச் சான்றாக விளங்குகிறது.

**3. திருச்சபை நிர்வாகம் மற்றும் உள்நாட்டுத் தலைமை:**

அவர் தமிழகம் வந்தபோது சுமார் 4,500 ஆக இருந்த விசுவாசிகளின் எண்ணிக்கை, அவரது அயராத உழைப்பினால் 60,000-க்கும் மேலாக உயர்ந்தது. குறிப்பாக, சுதேச போதகர்களை (Native Clergy) உருவாக்குவதில் அவர் காட்டிய ஆர்வம், இன்று திருச்சபை தன்னாட்சி பெற்று விளங்குவதற்குப் பெரும் துணையாக இருந்தது. 35-க்கும் மேற்பட்ட சுதேச போதகர்கள் அவர் காலத்தில் பணியாற்றியது திருச்சபை வரலாற்றில் ஒரு மைல்கல்.

**4. சமூக நீதி மற்றும் கல்வி:**

பெண்களுக்கான விடுதிப் பள்ளிகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களைத் தொடங்கி, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வில் ஒளியேற்றினார். 'சுவிசேஷம் என்பது ஆத்துமாவுக்கு மட்டுமல்ல, மனிதனின் சரீரத் தேவை மற்றும் சமூகத் தகுதிக்கும் உரியது' என்ற உயரிய கொள்கையை அவர் நடைமுறைப்படுத்தினார்.

**வாழ்த்துரை:**

இன்று நாம் அனுபவிக்கும் திருச்சபை வளர்ச்சியும், சமூக அங்கீகாரமும் பேராயர் கால்டுவெல் போன்ற வரலாற்று நாயகர்கள் சிந்திய வியர்வையிலும், அவர்கள் காட்டிய தீர்க்கதரிசனத்திலும் உருவானவை. அவரது பிறந்தநாளில், அவர் காட்டிய 'உழைப்பு, கல்வி, மற்றும் சமூக சேவை' ஆகிய பாதையில் தொடர்ந்து பயணிக்க கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் உறுதி ஏற்கிறது.

இவரது நினைவைப் போற்றி, இன்றைய திருச்சபை வளர்ச்சிக்கு வித்திட்ட இந்த மாமனிதருக்கு எமது சிரம் தாழ்ந்த வணக்கங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**இங்ஙனம்,**
**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்**



# சங்க பணிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.**

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

தமிழகக் கிறிஸ்தவ திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகி வந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருக்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **' கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலக கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்து வருகின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனி நபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜீன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1780 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு **தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர்** அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

- நம்முடைய வரலாற்று சங்கமும் கிறிஸ்தவ ஆய்வு மற்றும் ஆவணப்படுத்து மையமும் இணைந்து **'புத்தக வனம்'** செயலி செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்த செயலி தமிழகத்தில் முதல் முறையாக டிஜிட்டல் முறையில் கையடக்க வடிவில் புத்தகமாக முழு நூலகமாக உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இன்னும் பல ஆயிரம் புத்தகங்களை பதிவேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் பெயரிலேயே **நினைவு புத்தக அங்காடி** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழக வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனெரிகளுடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மிஷனெரிகள் பணி செய்த இடங்கள், அவர்களுடைய நினைவிடங்கள், தங்கியிருந்த இல்லங்கள், கல்லறைகள், வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள், இரத்த சாட்சிகளாக மரித்த மிஷனெரிகள் பணி செய்த மற்றும் தங்களை இரத்த சாட்சியாக ஒப்புக்கொடுத்த இடங்களை தெளிவான முறையில் பார்வையிடவும், வெளியிடங்களிலிருந்து வரும் மக்களின் வசதிக்காகவும் **Mission Tourist Map** என்று செயலி உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்குமிடங்கள், வழித்தடங்கள் அடங்கிய மின்னியல் கையேடு அமைப்பது.
- வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் கீர்த்தனை கவிஞர்கள், உபதேசிமார்கள், முன்னாள் குருமார்களுடைய வரலாற்று பொக்கிஷங்களை சேகரித்து வருகிறோம். மேலும் அவர்களுடைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள், கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள், பாடல்களின் வரலாறுகளையும் சேகரித்து அதை மின்னியல் முறைக்கு மாற்றும் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றோம்.
- தமிழ் கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரித்து மின்னியல் முறையில் ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகத்திலும், பேராசிரியர் **அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் நினைவு புத்தக அங்காடி**யிலும் பதிவேற்றம் செய்வதுடன் புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக ஒரு சிறந்த ஆய்வு நூலகம் அமைக்கவும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.
- மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்டு ஆவணப்படங்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால், வருகிற ஆண்டு **கிளாரிந்தா, ஏமி கார்மைக்கேல்** மிஷனெரிகளின் வரலாற்றை ஆவணப்படமாக்க திட்டமிட்டிருக்கிறோம்.
- தங்களுடைய வசதியான வாழ்வை தியாகம் செய்து நம் நாட்டிற்கு வந்து கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகள் மற்றும் தன் சொந்த மக்களுக்காக தங்களையே அர்ப்பணித்த நம் இந்திய மிஷனெரிகளின் நினைவிடங்கள் மற்றும் கல்லறைகளை கண்டறிவதுடன் திருச்சபையுடன் இணைந்து பராமரித்து அவர்களுடைய தியாகங்களை குறித்த விழிப்புணர்வை திருச்சபை மக்களுக்கு ஏற்படுத்த பணியாற்றி வருகிறோம்.
- வரலாற்றுச் சங்கம் சார்பில் மிஷனெரிகள் பயன்படுத்திய கலை பொருட்கள் மற்றும் புத்தகங்கள், பைபிள், மிஷனெரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து வருகிறோம்.
- கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் மற்றும் மேய்ப்பரின் பயிலகம் சார்பாக கடந்த இரண்டு மாதமாக இணையதள **சீர்திருத்த தமிழ் திருச்சபையின் ஆரம்பங்கள்** என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செவ்வாய்கிழமைகளில் இரவு ஏழு முப்பது மணிக்கு நடைபெற்று வருகின்றன.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடந்த 2017ம் ஆண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** இது வரையிலும் பல்வேறு தடைகளையும், நெருக்கடிகளையும் கடந்து வந்திருக்கிறது. வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடைய இடைவிடா ஜெபத்தாலும், ஆதரவாலும், உதவியாலும் நம் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் நம்முடைய மாதாந்திர ஆய்விதழும் தடைகளின்றி வெளி வருகிறது. நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைய ஜெபத்தாலும், உடலுழைப்பாலும், பொருளாதார வழியிலும் உதவி வரும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் செயல்பட வேண்டிய தளங்கள் அநேகமுண்டு. இணைந்து செயல்பட அன்புடன் அழைக்கிறோம். வரலாற்றுச் சங்கத்தின் ஓர் அங்கமாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கருவியாவோம். சர்வ வல்லமை கொண்ட ஆண்டவரின் ஆயுதமாவோம்.

christianhistoricalsociety.in/

# ரெவரெண்ட் டி. பி. பாண்டியன்:

## ஒரு வரலாற்றுப் பார்வை



மன்னா செல்வகுமார்

**அருள்திரு டி. பி. பாண்டியன்: ஒரு வரலாற்றுப் பார்வை**

அருள்திரு டி. பி. பாண்டியன் சென்னையைச் (அன்றைய மெட்ராஸ் மாகாணம்) சேர்ந்த ஒரு கிறிஸ்தவ மிஷனரி மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார். இவர் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தென்னிந்தியாவின் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகவும், அவர்களின் சமூக இழிவை நீக்கவும் தீவிரமாகப் பாடுபட்டவர்.

**'இங்கிலாந்து டு அன் இந்தியன் ஐ' (England to an Indian Eye):**

1893-ஆம் ஆண்டு மே 20-ல் மும்பையிலிருந்து 'மிர்சாபூர்' (Mirzapore) என்ற கப்பலில் இங்கிலாந்திற்குப் பயணம் மேற்கொண்டார். இந்தப் பயணத்தின் நோக்கம் வெறும் சுற்றுலா அல்ல; மாறாக, இந்தியாவில் நிலவும் சமூக அநீதிகளை பிரிட்டிஷ் மக்களிடம் எடுத்துக்கூறி ஆதரவு திரட்டுவதே ஆகும்.

**பாண்டியனின் சமூகப் பணிகள் மற்றும் 'பறையர் பிரச்சனை':**

பாண்டியன் இந்தியாவில் நிலவிய தீண்டாமை மற்றும் அடிமை முறைக்கு எதிராகக் குரல் கொடுத்தார். இவரது நூல்களான 'The Slaves of the Soil in Southern In-

dia' (தென்னிந்தியாவின் மண்ணின் அடிமைகள்) மற்றும் 'Indian Village Folk' போன்றவை அன்றைய இந்தியக் கிராமப்புறங்களில் ஒடுக்கப்பட்ட மக்கள் அனுபவித்த கொடுமைகளை உலகுக்குப் பறைசாற்றின.

இங்கிலாந்து சென்றிருந்தபோது, பிரிட்டிஷ் பிரபுக்கள் மற்றும் தலைவர்களைச் சந்தித்து, இந்தியாவில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வி மற்றும் நில உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

**லண்டன் பயண அனுபவங்கள்:**

பாண்டியன் தனது நூலில் பிரிட்டிஷ் சமுதாயத்தைப் பற்றிப் பல வியக்கத்தக்கக் குறிப்புகளை வழங்கியுள்ளார்:

1. **லண்டன் காவல்துறை (The Police):** லண்டன் காவல்துறையினரின் கடமை உணர்வையும், அவர்கள் ஊழலுக்கு அப்பாற்பட்டு விளங்குவதையும் பாண்டியன் வெகுவாகப் பாராட்டுகிறார். அவர்களை 'பாபி' (Bobby) என்று குறிப்பிடும் அவர், இந்தியக் காவல்துறையினர் இவர்களிடமிருந்து பாடம் கற்க வேண்டும் என்கிறார்.
2. **தொழில்நுட்பம் மற்றும் போக்குவரத்து:** லண்டனின் ரயில்வே அமைப்பு, போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்கும் விதம் மற்றும் அப்போதே அங்கு அறிமுகமான மின்சார விளக்குகள் ஆகியவற்றைக் கண்டு வியக்கிறார்.
3. **பெண்களின் நிலை:** இங்கிலாந்து நாட்டின் அறிவுலகப் பெண்களுக்கு (Enlightened Daughters of Great Britain) தனது நூலை அர்ப்பணித்துள்ளார். அவர்களின் சமூக ஆர்வம் மற்றும் கல்வித் தரம் இந்தியப் பெண்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என அவர் கருதினார்.

**ஆங்கிலேய சமூகத்தின் மீதான விமர்சனம்:**

பாண்டியன் ஆங்கிலேயர்களைப் புகழ்ந்தாலும், அந்தச் சமுதாயத்தில் இருந்த குறைகளையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. **'சமூகத் தீமைகள்'** (Social Evils) என்ற அதிகாரத்தில், லண்டனில் நிலவிய குடிப்பழக்கம் (Drinking), சூதாட்டம் மற்றும் வறுமை ஆகியவற்றைப் பற்றியும் விரிவாக எழுதியுள்ளார். பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே இருந்த பெரிய இடைவெளியைச் **'சுயநலத்தின் வெளிப்பாடு'** என்று சாடுகிறார்.


**கல்வி மற்றும் மதப் பார்வை:**

கேம்பிரிட்ஜ் கிங்ஸ் கல்லூரி மற்றும் லண்டன் பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிறுவனங்களை நேரில் பார்வையிட்ட பாண்டியன், அத்தகைய கல்வி முறையே இந்தியாவின் அறியாமையைப் போக்க வல்லது என நம்பினார். அதே சமயம், கிறிஸ்தவ மதத்தின் பல்வேறு உட்பிரிவுகள் லண்டனில் ஒரு போர்க்களத்தைப் போல மோதிக்கொள்வதையும் (Religious Divisions) அவர் பதிவு செய்துள்ளார்.

**வரலாற்று முக்கியத்துவம்:**

டி. பி. பாண்டியனின் எழுத்துக்கள் 19-ஆம் நூற்றாண்டின் தமிழகச் சமூக வரலாற்றைப் புரிந்துகொள்ள மிக முக்கியமானவை. அயோத்திதாசப் பண்டிதர் போன்றவர்களுக்கு முன்பே, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்திற்காகச் சர்வதேச அளவில் ஆதரவு திரட்டிய முன்னோடி இவர்.

ரெவரெண்ட் டி. பி. பாண்டியன், ஓர் இந்தியராகவும் தமிழராகவும் இருந்து கொண்டு, 130 ஆண்டுகளுக்கு முன்பே லண்டன் சென்று, இந்தியாவின் சமூக நீதிப் போராட்டத்தை உலக அரங்கில் முன்னெடுத்தவர். அவரது 'England to an Indian Eye' புத்தகம், ஒரு தென்னிந்தியப் பார்வையிலிருந்து மேற்கத்தியச் சமுதாயத்தை மதிப்பிடும் ஒரு மிகச்சிறந்த வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது. இவருடைய பணிகள் தமிழகச் சமூக நீதியின் வேர்களில் ஒன்றாக இன்றும் மதிக்கப்படுகின்றன.




# பாலைவனச் சோலையான 'கொள்ளிடம் மிஷன்' வரலாற்றுச் சுவடுகள்

திரு. Y. ரூஸ்வெல்ட்

தமிழ்நாட்டில் கிறிஸ்தவ நற்செய்திப் பணியின் வரலாற்றை ஆராயும்போது, வறண்ட நிலங்களை வளமான ஆன்மீக பூமியாக மாற்றிய மிஷனரிகளின் தியாகங்கள் எண்ணற்றவை. அந்த வகையில், கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள நிலப்பரப்பில், கல்வி, மருத்துவம், மற்றும் இறையியலை விதைத்து மாபெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய **'கொள்ளிடம் மிஷன்'** (Coleroon Mission) மற்றும் இன்றைய **'பெரம்பலூர் – கொள்ளிடம் மறை மாவட்டத்தின்'** தோற்றம் குறித்த வரலாற்றுச் சுவடுகளை இக்கட்டுரையில் காண்போம்.

### நிலவியல் அமைப்பும் ஆரம்பகால வரலாறும்:

கொள்ளிடம் ஆற்றின் வடகரைப் பகுதியானது, ஆற்றின் மட்டத்திலிருந்து சுமார் 250 அடி உயரத்தில் அமைந்திருந்த ஒரு வறண்ட மேட்டுப்பாங்கான நிலமாகும். காவிரி நீர் வரத்து இல்லாததாலும், சிறு காட்டாறுகளால் மட்டுமே ஓரளவு நீர் கிடைத்ததாலும், 10-ஆம் நூற்றாண்டு வரை இப்பகுதியில் மக்கள் குடியேற்றங்கள் அதிகம் இல்லை.

11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கானக்களூர், பெருவளப்பூர் போன்ற ஊர்கள் உருவாகத் துவங்கின. 12 முதல் 14-ஆம் நூற்றாண்டு வரையிலான சோழர் காலத்தில், கோயில்களை மையமாகக் கொண்டு **'தேவதான நிலங்கள்'** மற்றும் **'இறையிலி நிலங்கள்'** உருவாக்கப்பட்டன. காடுகளைத் திருத்தி மக்கள் குடியேறிய இப்பகுதிகள் **'புறக்குடி'** மற்றும் **'உட்குடி'** என அழைக்கப்பட்டன. இங்கு கி.பி. 1015 முதல் 1234 வரையிலான கல்வெட்டுச் சான்றுகள் காணப்படுகின்றன.

### ஐரோப்பியர்களின் வருகையும் வரலாற்றுத் திருப்பங்களும்:

15-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு புறத்தாக்குடி, கல்பாளையம் ஆகிய ஊர்களில் ரோமன் கத்தோலிக்க மார்க்கம் பரவத் துவங்கியது. 16-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் மற்றும் பிரெஞ்சுப் படைகளுக்கு இடையிலான போர்கள் சமயபுரம், கண்ணனூர், இருங்களூர் போன்ற பகுதிகளில் நடந்தன. குறிப்பாக, கண்ணனூரில் தங்கியிருந்த ராபர்ட் கிளைவ் மீது பிரெஞ்சுப் படை நடத்திய தாக்குதலில் இருந்து அவர் மயிரிழையில் உயிர் தப்பிய வரலாற்று நிகழ்வும் இப்பகுதியில் நடந்துள்ளது.

17 மற்றும் 18-ஆம் நூற்றாண்டுகளில் தரங்கம்பாடி, சென்னை, திருநெல்வேலி போன்ற பகுதிகளில் மிஷனரிகள் தீவிரமாகப் பணியாற்றத் துவங்கினர். இதன் தொடர்ச்சியாகவே கொள்ளிடம் பகுதியிலும் நற்செய்திப் பணிகள் காலூன்றின.

### இருங்களூர்: மிஷனரிகளின் தலைமையிடம்

பல்லவர் மற்றும் சோழர் காலத்தில் சிற்றரசர்களால் ஆளப்பட்ட 31 கிராமங்களை உள்ளடக்கிய இருங்களூர் பகுதி, பின்நாளில் கிறிஸ்தவ மிஷனரிகளின் முக்கிய கேந்திரமாக மாறியது. இங்கு பச்சைக்குத்து சேர்வைக்காரர் மற்றும் அருணாசலம் பிள்ளை ஆகியோர் நீர் பாசனத்திற்காக **'கலிங்கி'** கட்டியதைக் குறிக்கும் பிற்காலத் தமிழ்க் கல்வெட்டுகள் இன்றும் காணப்படுகின்றன.

இப்பகுதியில் நிலவிய வறட்சி, சமூகப் பின்தங்கிய நிலையைக் கண்ட மிஷனரிகள், வறண்ட நிலங்களை விலைக்கு வாங்கி **'கொள்ளிடம் மிஷன்'** (Coleroon Mission) என்ற அமைப்பை உருவாக்கினர். இருங்களூர் என்ற ஊரை மையமாக வைத்து, மருத்துவம், கல்வி, மற்றும் இறைப்பணிகளைத் துவங்கினர். எனவேதான், **'இருந்த ஊர்'** என்பது மருவி **'இருங்களூர்'** என பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது.

### கோலாஃப் (Kohlhoff) குடும்பத்தினரின் அளப்பரிய தொண்டு:

1843-ஆம் ஆண்டு மிஷனரிகளின் நிர்வாக வசதிக்காகப் பல தனிப்பகுதிகள் உருவாக்கப்பட்டன. அதில் **'கொள்ளிடம் அல்லது இருங்களூர் மிஷன்'** முக்கியத்துவம் பெற்றது. 1840-இல் திருச்சிக்கு வந்த அருள்திரு. கிறிஸ்டியன் சாமுவேல் கோலாஃப் (Rev.Christian Samuel Kohlhoff), 1842-இல் இருங்களூர் மிஷனின் பொறுப்பை ஏற்றார்.

**இவரது குடும்பம் தமிழகக் கிறிஸ்தவ வரலாற்றில் தனித்துச் சிறப்பு வாய்ந்தது.**

- தாத்தா: ஜான் பெல்தாசார் கோலாஃப் (1710-1790)
- தந்தை: ஜான் கஸ்பர் கோலாஃப் (1762-1844)
- மகன்: கிறிஸ்டியன் சாமுவேல் கோலாஃப் (1815-1881)

மூன்று தலைமுறைகளாக தரங்கம்பாடி, தஞ்சை, திருநெல்வேலி மற்றும் கொள்ளிடம் பகுதிகளில் இவர்கள் ஊழியம் செய்தனர். கிறிஸ்டியன் சாமுவேல் கோலாஃப் அவர்கள், தனது வாழ்நாளில் சுமார் 23 வருடங்கள் இருங்களூர் பகுதியின் வளர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். 1881-ஆம் ஆண்டு டிசம்பர் 3-ஆம் தேதி மறைந்த அவர், தரங்கம்பாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டார். இருங்களூர் தேவாலயத்தில் அவருக்கான நினைவுக்கல்வெட்டு இன்றும் காணப்படுகிறது.

### சமூக மறுமலர்ச்சியும் திருமண்டல உதயமும்:

கோலாஃப் மற்றும் பிற மிஷனரிகளின் அர்ப்பணிப்பால், கல்வி மற்றும் வாழ்வாதாரத்தில் மிகவும் பின்தங்கியிருந்த கொள்ளிடம் பகுதி மக்கள், இருங்களூரைத் தலைமையிடமாகக் கொண்டு மாபெரும் வளர்ச்சி கண்டனர். கிராமங்கள்தோறும் திருச்சபைகள் கட்டப்பட்டன. பள்ளிகள் (உதாரணமாக St. John's High School), மருத்துவமனைகள் திறக்கப்பட்டன. வறண்ட நிலப்பரப்பு, மிகப்பெரிய பணியத்தளமாக மாறியது.


1947-ஆம் ஆண்டு செப்டம்பர் 27-இல் தென்னிந்தியத் திருச்சபை (CSI) உருவானபோது, கொள்ளிடம் மிஷன் பகுதிகள் திருச்சிராப்பள்ளி மறை மாவட்டத்தோடு இணைக்கப்பட்டன. மிஷனரிகள் நாட்டிய விதை மாபெரும் விருட்சமாக வளர்ந்ததன் விளைவாக, சரியாய் அரை நூற்றாண்டுக்குப் பின், 1997-ஆம் ஆண்டு ஏப்ரல் 14-ஆம் தேதி, திருச்சி திருமண்டலத்திலிருந்து பிரிக்கப்பட்டு, சி.எஸ்.ஐ-யின் புதிய ஆறாவது திருமண்டலமாக 'பெரம்பலூர் - கொள்ளிடம் மறை மாவட்டம்' (Perambalur - Coleroon Diocese) உதயமாகியது. இதன் முதல் பேராயராக அருள்திரு. R. பால்ராஜ் அவர்கள் பொறுப்பேற்றார்.

ஆறுகளில் தண்ணீர் இல்லாத வறண்ட மேட்டு நிலமாக இருந்த ஒரு பகுதியை, நற்செய்தி என்னும் ஜீவத்தண்ணீரால் வளமாக்கியவர்கள் மிஷனரிகள். நூற்றாண்டுகளைக் கடந்த பழமையான கல்வெட்டுகளையும், கம்பீரமான இருங்களூர் ஆலயத்தையும், கல்விக்கூடங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள பெரம்பலூர் - கொள்ளிடம் திருமண்டலம், கிறிஸ்தவத் தியாகத்தின் அழியாத வரலாற்றுச் சுவடாக இன்றும் நிலைத்து நிற்கிறது.

**ஆதாரங்கள்:**

**திரு. Y. ரூஸ்வெல்ட்**


1. ஒளி வீசும் சுடர்கள்
2. திருச்சபைகள், வரலாற்றுப்பார்வை - அருட்பணி




**அன்புள்ள சங்க உறுப்பினர்களுக்கு**

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்,

இயேசு கிறிஸ்துவின் கிருபையால், கிறித்தவ வரலாற்றுச் சங்கம் (CHS) இதுவரை சுமார் 14,000 க்கும் மேற்பட்ட அரிய கிறித்தவ நூல்கள் மற்றும் மிஷனரி ஆவணங்களை டிஜிட்டல் வடிவில் கொண்டு வந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். நூலக கட்டிடப் பணிகள் முடிந்து, நூலகம் தமிழகம் முழுவதும் உள்ள அநேக திருச்சபை மக்களும், போதகர்களும், இறையில் மாணவர்களும், பாஸ்டர்களும் பயன்படுத்தி வருகின்றது மிகவும் மகிழ்கின்றோம்.

நாங்கள் இது வரை டிஜிட்டல் செய்யப்பட்ட ஆவணங்களை பாதுகாப்பாக சேமித்து, நவீன தொழில்நுட்பத்தின் மூலம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஒரு தனிப்பட்ட டேட்டா சர்வர் அவசியமாக உள்ளது. இதற்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூ 3,00,000 ஆகும். இது சங்கத்தின் அவசர தேவையாக உள்ளது.

அதேபோல நூலகத்தின் உள் அமைப்பு பணிகளும், பழமையான அசல் (original) அரிய நூல்களை பாதுகாக்க கண்ணாடி பெட்டிகள் (Glass Casing) அமைக்கும் பணிகளும் இன்னும் நிறைவு பெறவில்லை. நூலக உள் அமைப்பு பணிகள் இதற்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூ 4,00,000 ஆகும்.

இந்த தேவைகளை சந்திப்பதின் மூலம் அடுத்தக்கட்ட பணிகளை முன்னெடுத்து செல்ல முடியும். இந்த ஊழியத்தில் நீங்களும் பங்கெடுக்கும் வண்ணமாக இந்த மகத்தான முயற்ச்சிக்கு உதவி செய்ய பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். 18,19 ம் நூற்றாண்டுகளில் மிஷனெரிகள் செய்த பணிகளை தெரிந்துகொள்ளவும், அடுத்த தலைமுறை கைகளின் வரலாற்றைக் கொண்டுசெல்லவும், டிஜிட்டல் பாதுகாப்பும், அசல் (original) நூல்களை பாதுகாப்பதற்கும் இது உதவும்.

உங்களின் அன்பிற்கும், ஆதரவிற்கும் நன்றி. தொடர்ந்து ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்கின்றோம்.

**Bank Details for Donations**

**Account Name: Christian Historical Society**
**Account No: 17480200004906**
**IFSC Code: FDRL0001748**
**Bank: Federal Bank, Surandai Branch**
**Contact: +91 91767 80001**
**christianhistorical@gmail.com**
https://christianhistoricalsociety.in/magazine/

**கிறிஸ்தவ வரலாற்றுப் பணியில்**
**மன்னா செல்வகுமார்**
**கிறிஸ்தவ மரபு ஆய்வாளர்**




# Yearly Subscription

**600**

christianhistoricalsociety.in

Apply Now

## Monthly Magazine for church history

Return Requested:

Tamil Printed Book- For Private Circulation Only

To

**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**

Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Education- For Private Circulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401